462

17 JAN 1930
MADRAS

தொகுதி 8.] 1929ளு டிசம்பர்மீ 1வ. [பகுதி 11

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
...னிசாமி முதலியார்,
...க நிலையம். சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகளுக்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரா ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 (

| | | | | |
|---|---|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | ( |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | [illegible] | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

செல்வ:—விசேஷமான சம்பவம் ஒன்றுமேயில்லை. உண்மையில் இப்போது நான் கூறிய அந்தச் சிறைவாசத்தில் இருக்கும் ஆசாமி அச்சங்கதியைக் கூறும் முன் என்கையில் எள்ளளவு வேலைகூட இல்லை. கொஞ்ச காலம் விடுமுறை பெற்றுக்கொண்டு எங்காவது கிராமங்களுக்குச் சென்று வரவேண்டுமென்று நேற்றுக்கூட சிந்தித்துக்கொண் டிருந்தேன்.

தானப்:—ஆகா நீ நன்றாய் அப்படிச்சென்று கொஞ்சகாலம் இளைப்பாறி வரலாகும். அதற்கு உன்னைவிடப் பாத்திரவான் வேறெவனுமில்லை யென்று நான் திட்டமாய்க் கூறுவேன். ஏனெனில் நீ மிக்க சிரத்தையும் சுறுசுறுப்பும் கஷ்டமும் எடுத்துக்கொண்டு அனேகம் கள்ளப் பயல்களைப் பிடித்துச் சிறைவாசத்திற்கு அனுப்பியிருக்கிறாய். ஆகா! அனேகம்பேர் முன்னே யுன்னால் பிடிக்கப்படுவதும், பிறகு நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படுவதும், கடைசியில் என்கையால் மாள்வதுமானார்கள். உலகநடை யப்படி யிருக்கிறது.

செல்வநாதன் வேடிக்கையாய் நகைத்துக் கொண்டே "ஏது தானப்பா உலகநீதியில் இறங்கிவிட்டாய். உன்னை யுடனே ஹோட்டலுக் கழைத்துச்சென்று சாராயமும் சிற்றுண்டியும் வாங்கி விருந்தளிக்கவேண்டுமென்றே பிரியப்படுகிறேன். உன்தொழில் முடியுமுன் அப்படிச்செய்ய அஞ்சுகிறேன்" என்றான்.

தானப்பன் "மிக்க வந்தனம். ஆயினும் இன்று காலை யெனக்கு அதில் அவ்வளவாய்ப் பிரியமில்லை. ஏனெனில் உண்மையில் இரவு கொஞ்சம் அதிகமாய்க் குடித்துவிட்டேன்" என்றான்.



186546.

செல்வநாதன் "ஓகோ சங்கதி யறிந்துகொண்டேன். இவ்வீதியின் கோடியில் ஒரு நேர்த்தியான ஒரு ஹோட்டலிருக்கிறது. நீ நேற்று பகல் முழுதும் வேலைசெய்து சம்பாதித்த பணத்தை யெல்லாம் இரவு முழுதும் அந்த ஹோட்டலில் செலவழித்தாய் என்று நான் பந்தயம் போடுவேன்" என்றான்.

தானப்பன் "கூறியது உண்மையே. இன்று இன்னும் சரியான காக்கிகள் வரவில்லை" என்றான்.

செல்வநாதன் "ஆ! நல்லவேளையாய்க் கவனப்படுத்தினாய். நான்கூட நேற்றே செய்துகொள்ளவேண்டி யிருந்தும் தவறிவிட்டேன்" என்றான்.

தானப்பன் "ஆகா! அப்படியானால் வாருங்கள் உள்ளே" என்றான்.

செல்வநாதன் அவ்வாறே யுள்ளேசென்று உட்கார்ந்து க்ஷவரம் செய்துகொள்ளத் தொடங்கினான். தானப்பனுக்கு நெடுநாளாய் நமது கள்ளத்தொழில் செல்வநாதனுக்குத் தெரிந்திருக்குமோ வென்ற சந்தேகம் மனதிலுண்டு. செல்வநாதன் தன்னைச் சற்று உற்றுநோக்கும்போதெல்லாம் அவனுக்குப் பெருந்திகிலே. ஆனால் அப்படி யவனுக்குத் தெரிந்திருந்தால் அவனுடைய முகஜாடையால் நாம் முன்னமே தெரிந்துகொண் டிருப்போமென்பது அவனுடைய எண்ணம். ஆயினும் இப்போது கள்ளர் காலனாகிய செல்வநாதன் சம்பாஷித்த மாதிரியால் தானப்பன் மனதில் கொஞ்சமிருந்த சந்தேகமும் அடியோடு பறந்து போயிற்று. அதோடு இப்போது இன்னொரு காரணம் அவன் மனதில் தோன்றியது. அதாவது செல்வநாதனுக்கு நமது இரகசியம் தெரிந்திருந்தால் அதை நாம் எப்படியேனும் அறிந்துகொண் டிருப்போமென்று அவன் யூகித்துக்கொள்வான். அப்படி யிருந்தால் தைரியத்தோடு நமது கத்தியின்முன் தன் தலை

யைக் குனியமாட்டான் என்பதே. இவ்வாறு தன் இரகசியம் அவனுக்குத் தெரியாதென்று இவன் பூரணமாய் நம்பியிருந்தாலும் மனதில் அவன்மேல் மிக்க வெறுப்பும் கோபமுமே இருந்தன. அப்போதுகூட அவன் செல்வநாதன் கழுத்தை யறுத்துவிடப் பின்னிடைந் திருக்கவேமாட்டான். அப்படிச் செய்தால் அந்த விநாடியே சங்கதி வெளியாய்விட்டுத் தன் பிராணனுக்கும் ஆபத்துநேரிடும் என்ற பயமே அவனை யப்படிச் செய்யவொட்டாது தடுத்தது.

செல்வநாதன் தானப்பனை நோக்கி "தானப்பா நீ யுன் தொழில் முறைமையில் பலவிதமான மனிதர்களைக் கண்டிருக்கலாகும்" என்ருன்.

தானப்:—ஆம். தாங்கள் கூறுவது உண்மையே; பலவித விகாரமும் பயங்கா ரூபமுமுடைய ஆசாமிகளையெல்லாம் கண்டிருக்கிறேன். என்னிடம் வந்து க்ஷவரம் செய்துகொண்டவர்களில் பலர் பிறர் என்கையாலேயே மாண்டிருக்கிருர்கள். ஏன் பைல்வான் இருந்தானே-சில மாதங்களுக்குமுன் மிக்ககுரூரமான இரண்டு கொலைகளை ஏககாலத்திற் செய்துவிட்டு மாணதண்டனை யடைந்தானே......

செல்வ:—ஆம். ஆம். நான்ருன் மிக்க கஷ்டப்பட்டு அதற்கு வேண்டிய அத்தாட்சிகளை யெல்லாம் ஆதியோடந்தமாய்க் கண்டுபிடித்தவன்.

தானப்:—ஆகா! கொலை நடந்த மறுநாள் அவன் என்னிடம் வந்து க்ஷவரம் செய்துகொண்டான். அதே கொலையைப்பற்றி யென்னிடம் வெகுநேரம் பேசினுன். அச்சமயம் யாராவது அவன் பேச்சைக் கேட்டிருந்தால் அவன் மிக்க இளகிய மனமுடைய பரமயோக்கியனென்றே மதிப்பார்கள். ஆனல் என் மனதில்மட்டும் இவனே அக்கொலையைச் செய்தவன் என்பதில் எள்ள

ளவு சந்தேகம்கூடக் கிடையாது. ஆனால் அவன் அகப் பட்டுக்கொள்வான் என்றாவது நானே யவன் கழுத் திற்குக் கயிறு மாட்டுவே னென்றாவது அச்சமயம் நான் சற்றும் நினைக்கவேயில்லை.

செல்வ:— "இது மட்டுமல்ல உனக்கு அனேக விஷயங்க ளும் அனேகர் சமாசாரங்களும் தெரியும். ஏனெனில் ஜனங்கள் சாதாரணமாய்த் தங்கள் விவகாரங்களை யெல்லாம் பேசுவது இந்த விடத்தில்தான்" என்றான்.

அச்சமயம் தட்டென்று இன்னொருவர்த்தகன் க்ஷவரம் செய்துகொள்ள வந்தான். அதைக்கண்டதே தானப்பன் தன் உதவியாளாகிய ஜனகனை யழைத்து வந்தவனுக்கு வேலை செய்யும்படிக் கூறினான். செல்வநாதன் தானப்பனை நோக்கி:—

"பேஷ்! நீ நல்ல வாலிபனை வேலைக்கு வைத்துக்கொண் டிருக்கிறாய். உண்மையாகவே நீ நல்ல நேர்த்தியான வாலி பனையே வைத்துக்கொண் டிருக்கிறாய்" என்றான்.

தானப்:— "இவன் என் வேலைக்காரனல்ல வையா. இவன் என் குடும்பத்திலே யிருக்கிறவன்" என்று கூறிவிட்டு, ஜனகனை நோக்கி "இதோ பார்; இவர் யார் தெரியுமா? இவர் தான் செல்வநாதர்" என்றான்.

ஜனகன் உடனே மிக்க வியப்போடும் பெருமையோடும் செல்வநாதனை உற்று நோக்கி, "ஆ! நான் இவரை யிதுகாறும் காணவில்லை யாயினும் இவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கி றேன். இவருடைய தொழிலைப்பற்றி மட்டும் எனக்குப் பிரியமில்லா விடினும், இவர் தான் நமது நாட்டிலுள்ள எல்லாரிலும் பிரக்யாதி பெற்றவர்; பெருமைக்கும் கௌரவத் திற்கும் உரியவர் என்பதே என்னுடைய மதிப்பு" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட செல்வநாதன் புன்னகை யோடு அவ்வாலிபனை நோக்கி, "நீ யென்னைப்பற்றிக் கூறிய

அபிப்பிராயத்திற்காக நிச்சயமாகவே நான் உனக்கு மிக்க வந்தனமளிக்கிறேன்'' என்முன்.

ஜனகன் மறுபடி தானப்பனை நோக்கி, நான் துப்பறியும் ஜெயராம் என்பவனுடைய சரித்திரமுழுதும் நன்ருய் வாசித்துப் பார்த்தேன். அவன் மிக்க சாமர்த்தியவானென்றும், அநேகம் கள்ளரைப் பிடித்துவிட்டான் என்றும் பலவிதமாய்ப் புகழ்ந்து எழுதப்பட்டிருக்கிறது. ஆனல் இவரோடு அவனை யொப்பிட்டுப் பார்க்கும்போது, கள்ளரைப் பிடிக்கும் பலபேர்களில் அவன் மிக்க இழிவான ஒருவனே யென்பது என் மனப்பூர்வமான அபிப்பிராயம். இதோடு அவன் கள்ளரிலும் மிக்க இழிவான அக்கிரமக் கள்ளப்பயலேயாகும்'' என்முன்.

செல்வநாதன் மிக்க அன்போடும், இரக்கத்தோடும், சிநேக பாவத்தோடும் அவனை நோக்கி "நண்பனே! நான் அப்படிப்பட்டவனல்ல வென்பது உன் கருத்தா? அல்லது உன் அர்த்த மென்ன? எதையும் மனம் விட்டுக்கூறு. நீ யென்ன கூறினுலும் உன் மனப்பூர்வமான அபிப்பிராயத்தைக் கூறினல் நான் கொஞ்சமேனும் கோபித்துக் கொள்ள மாட்டேன்'' என்முன்.

ஜன:— நான் கூறவந்த தென்னவெனில் ஜெயராம் கள்ளரோடேயே கூடிக்கொண்டு அவர்களுக்கு உளவு கூறிக்கொண்டு அவர்களிடம் பணம் பறித்துக்கொண்டேயிருந்து கடைசியில் அவர்களைப் பிடித்துக் கொடுத்துவிடுவான். கள்ளர் அவன்மேல் கூறும் குற்றங்களை யார் நம்புகிருர்கள். இவர்கள் இப்படித்தான் கூறுவது என்று செவி யேற்பதேயில்லை. தாங்களோ தாங்கள் செய்யவேண்டிய கடமையை மனப் பூர்வமாகவும் சத்தியத்தோடும் செய்கிறீர்கள். மற்றவர்களைப் போல் உங்களைப்போன்ற உத்தியோகஸ்தர் இருக்கவேண்டி

யது அனுவசியம் என்று கூற நான் அவ்வளவு முட்டா ளல்ல. நீங்கள்தான் இந்த உத்தியோகத்திற்குத் தகுதி யானவர்கள். தாங்கள் அவனைப்போலிருந்தால் உங்க ளைக் கத்தியால் ஒரு குத்தாய்க்குத்த நான் முன் பின் சிந்திக்கவே மாட்டேன்" என்று களங்க மின்றிக் கூறினான்.

இவன் மொழிகளைக்கேட்ட தானப்பன் பயமும் கல வரமுமடைந்து கோபத்தோடே அவனை நோக்கி, "ஜனகா! இம்மாதிரி மொழிகள் நீ எங்கேனும் இவரைப்பற்றிக் கூற வும் கருதலாகும். அய்யோ! என் குடும்பத்தில் உன்னைச் சேர்த்துக்கொண்டது முதல் நான் எவ்வளவோ நற்புத்தி களைக்கூறி யோக்கியமான நெறிகளி லல்லவோ உன்னைப் பழக்கி வைத்திருக்கிறேன். உனக்கு நன்றாய் வாசிக்கவும் எழுதவும் கற்பித்துக் கொடுத்தது இதற்குத்தானோ?" என்று மிக்க விசனத்தோடு மொழிந்தான்.

ஜன:—அதெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். நான் நிச்சயமாய் இவருக்கு மன வருத்த முண்டாக வேண்டுமென்றாவது, வெறுப்பு கொண்டாவது இம் மாதிரி கூறியவனல்ல. இவர் "உன் மனதிலுள்ளதைத் தாராளமாய்க் கூறு. நீ மனப்பூர்வமாய் என்ன கூறி னும் கோபித்துக் கொள்ளேன் என்று இயம்பியதன் மேல் நான் கூறினேன்" என்றான்.

செல்வநாதன் சட்டென்று தானப்பனை நோக்கி "ஆம். நான் அப்படித்தான் கூறினேன். அது போலவே இப் போது இவன் கூறியவற்றில் எதைப்பற்றியும் எனக்கு நிச் சயமாகவே எள்ளளவு மனவருத்தமாவது, கோபமாவது, இவன்மேல் கெட்ட அபிப்பிராயமாவது வெறுப்பாவது கிடையாது. நீ இவன் மேல் இதற்காகச் சற்றும் கோபம் செய்யலாகாது" என்று கூறிவிட்டு, ஜனகனை நோக்கி,

"உனக்குச் சாதாரணமாய் எந்தப் புத்தகங்களை வாசிக்க அதிகப் பிரியம்" என்றான்.

வாலிபன்:—"கள்ளர்கள், வழிப்பறி கொள்ளைக்காரர், கடற் கொள்ளைக்காரர்கள், இப்படிப்பட்டவர்களுடைய சரித் திரங்கள் எதுவாயினும் சரி. தாங்கள் தங்கள் சரித்தி ரம் முழுமையும் அவசியம் ஒரு புத்தகமாய் எழுதி அச் சிடவேண்டும். அப்புத்தகத்தை முதலில் வாங்குபவன் நானாகவே யிருப்பேன். ஆகா! தாங்கள் எத்தகைய அபூர்வமான சம்பவங்களை யெல்லாம் கண்டிருக்க வேண்டும்! எத்தகைய தந்திர சாமார்த்தியவான்களா கிய கள்ளர்களை யெல்லாம் அறிந்து அவர்களைப் பிடிப் பதில் எத்தகைய அபூர்வமான தந்திரத்தோடும், சாமார்த்தியத்தோடும், முன் யோசனையோடும், தீரத் தோடும், துணிகரத்தோடும் பிடித்திருக்கவேண்டும். மனிதனாகப் பிறந்ததற்கு அத்தகைய சரித்திரத்தைப் படிப்பதே நல்ல பயனாகும்" என்றான்.

செல்வநாதன் தனக்குள் திருப்தியும் சந்தோஷமு மடைந்து "என்னிடத்தில் அபூர்வமான ஒரு புத்தகமிருக்கி றது. அதில் என் சரித்திரத்தில் முக்கியமான சில விஷயங் கள் இருக்கின்றன. ஒரு நாளைக்கு அதை யுனக்குக் காட்டுகிறேன்" என்றான்.

ஜனகன் "தங்கள் அன்பிற்காக மிக்க வந்தன மளிக்கி றேன். அப்படிச்செய்ய தங்களுக்கு எப்போது சௌகரியப் படுமோ?" வென்றான்.

தான:—"இதோ பார் ஜனகா! நீஇவரைத் தொந்திரவு செய் யக் கூடாது. அவர் அன்போடு உனக்கு வாக்குத் தத்தம் செய்தபடி நடந்து கொள்ள ஒருபோதும் மறக்க மாட்டார். 'அவருக்குச் சௌகரியம் நேரும் போது கட்டாயம் செய்வார். நமது செல்வநாதர் ஒரு

வேலை நமது ஏழைப்போஜனத்தை யருந்த உடன் படுவாராயின் நான் மிக்க நன்றி யுடையவனாயிருப் பேன்'' என்றான்.

செல்வ:—''சாப்பாட்டு விஷயத்தைப் பற்றிப் பிறகு கவனிப் பேன். இப்போது என் வேலை மந்தமாயிருக்கிற தென்று முன்னமே கூறினேனல்லவா. அதனால் சில தினங்களுக்கு நான் நாட்டில் சென்று உல்லாசமாய்க் காலத்தைக் கழிக்க வெண்ணியிருக்கிறேன். இப் போது நீ இவனை இரண்டொரு நாட்களுக்கு என் னோடனுப்பக் கூடுமாயின் இவனை யுற்சாகத்தோடு வைத்துக்கொண் டிருப்பேன்'' என்றான்.

தானப்பன் இதைக் கேட்டதே உள்ளத்தில் மிக்க சந் தோஷமுடையவனாகி, முன்னிலும் மிக்க மரியாதையோடு செல்வநாதனை நோக்கி ''தாங்கள் இவனுக்குப் பெரிய கன ணியத்தை யளிக்கிறீர்கள். தங்கள் பிரியப்படி நடந்து கொள்ள ஜனகன் மிக்க சந்தோஷ முடையவனா யிருப்பான் என்றே நம்புகிறேன்'' என்றான்.

செல்வ:—''சரி அப்படியாயின் உடனே யுன் உடை முத லியவற்றை யெடுத்துக்கொண்டு என்னோடு வா ஆயத் தப்படு '' என்று வாலிபனை நோக்கிக் கூறினான்.

ஜனகன் கண்களில் மிக்க சந்தோஷமான பிரகாசத்தை யுடையவனாகி, ''இதோ ஒரு நொடியில் வந்து விட்டேன்'' என்று கூறி, அதற்குள் தன் வேலையும் முடிந்து விட்டபடி யால், அவசரத்தோடு கத்தி முதலியவற்றை வைக்கவேண் டிய விடங்களில் வைத்துவிட்டு, உள் அறைக்குச் சென் றான்.

உடனே தானப்பனும் எழுந்து செல்வநாதனை நோக்கி ''அவன் நாணயமாக உடை முதலியவற்றை யெடுத்துக்

கொண்டு வருகிருனு வென்று கவனித்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே செல்வநாதனுடைய விடைக்கு எதிர்பாராமலே வாலிபன் பின்னாலேயே சென்றான்.

17 JAN

---

## 28 - வது அத்தியாயம்

தானப்பன் உள்ளே சென்றதும் ஜனகனை நோக்கி மிக்க அன்போடு "தம்பி! செல்வநாதன் உன்மேல் பிரியம் வைத்தழைப்பதைக் காண நான் மிக்க சந்தோஷமடைகிறேன். இந்தா இந்த இருபது ரூபாயையும் உன் கைச் செலவிற்கு வைத்துக்கொள். ஏனெனில் அவன் மேலான அந்தஸ்திலிருப்பவன். நீ யவனேடிருக்கும்போது அவனுடைய கௌரவத்திற்கு ஒக்க விதமாய் நடந்துகொண்டிருக்க வேண்டுமல்லவா'' என்றான்.

ஜனகன்:—"மிக்கவந்தனம். நான் செல்வநாதரிடம் இருக்கு மட்டும் என் கண்களையும் செவிகளையும் மிக்க எச்சரிக்கையோடேயே வைத்துக்கொண் டிருப்பேன்'' என்றான்.

தான:—அதுதான் நான் கூறவிருந்தது. மிக்க ஜாக்கிரதையோடு அவனுடைய தந்திர சாமார்த்தியங்களையும் அவன் தொழிலின் நுட்பத்தையும் கூடிய வரையில் அறிந்து கொள்ளவேண்டும்.

வாலி:—அதைப்பற்றி எனக்குக் கூறவேண்டியதே யில்லை.

தான:—அதோடு இன்னமொரு விஷயம் நீ கவனிக்க வேண்டும். அதாவது அவன் என்மேல் ஏதாவது சந்தேகம்கொண் டிருக்கிருனு வென்பதைக் கண்டு கொள்ளவேண்டும். இதுகாறும் அவனுக்குச் சந்தேகம்

இருப்பதாய்த் தெரியவில்லை. எதற்கும் நன்றாயறிந்து கொள்வது மிக்க நலமல்லவா.

வாலி:—நான் என்னால் கூடியவரையில் அவன் மனதிலுள்ள வைகளைப் பூரணமாய்க் கிரகித்துக் கொள்வேன் என்று நீ முழு நம்பிக்கையோடிருக்கலாம்.

தான:—அவன் உன்னை இன்னும் இரண்டொரு நாட்கள் தன்னோடிருக்கும்படி கேட்டால் நீ ஒப்புக்கொள். அதோடு நீ மட்டும் எனக்கு அனுகூலமான சங்கதிகள் ஏதேனும் கொண்டுவந்தால் நான் உனக்கு ஐம்பது ரூபாய்ப் பரிசளிப்பதோடு சந்தோஷமாய் அதைச் செலவு செய்ய ஒருவார விடுமுறையுமளிப்பேன்.

வாலி:—"நீ பூரணமாய் நம்பு. நான் என்னால் கூடிய எல்லா முயற்சிகளும் செய்து யாவும் கிரகித்துக்கொண்டு வருவேன். இனி இராசப்பனுக்கும் காமாட்சிக்கும் கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டு செல்வநாதனோடு செல்கிறேன்" என்று கூறிவிட்டு வீட்டிற்குள் சென்றான்.

இதற்கிடையில் செல்வநாதன் அந்த அறையின் நாற்புறங்களிலும் பார்த்தான். கவனமாய்ப் பார்க்கும்போது தானப்பன் தன் கத்தியைத் துடைத்த ஒரு சிறு கடிதத்தை அங்கிருந்த நெகிடித் தீக்குழியில் எறிந்தான். செல்வநாதன் அதை எடுத்துப்பார்த்தான். உடனே அதை மடித்துத் தன் ஜேபியில் வைத்துக்கொண்டான்.

அதற்குள் ஜனகன் தன் சிறு மூட்டையை யெடுத்துக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமாய் அங்கு வந்து விட்டான். உடனே இருவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்; அடுத்த வீதியில் இருவரும் ஒரு வண்டி பேசிக்கொண்டு

அங்கிருந்து நேராய்ச் செல்வநாதன் வீட்டிற்குச் சென்றார்கள்.

செல்வநாதன் பிரமச்சாரி; அவன் வசிக்கும் வீடு மிக்க சுத்தமாகவும் நேர்த்தியாகவும் அலங்காரம் செய்யப்பட்டதாயிருந்தது. அவன் தன் தொழிலில் நல்ல வருமானமடைந்து வந்ததால் நிம்மதியும் க்ஷேமமுமாகிய நிலைமையிலேயே யிருந்தான். அவன் வீட்டுக்காரியஸ்தியாக ஒரு மாதிருந்தாள். அவள் மிக்க மரியாதையானவள். அவள் பெயர் மீனாட்சி.

செல்வநாதன் அவளை நோக்கி "இவன் தானப்பனிடம் இருக்கும் ஆள். என்னோடு கொஞ்ச நாட்கள் இருக்கட்டுமென்று அழைத்து வந்தேன்" என்று கூறினான். அம்மாதிற்குத் தானப்பன் யாரென்று நன்றாய்த்தெரியும். அப்படியிருந்தாலும் அப்படிப்பட்ட தாழ்ந்த அந்தஸ்தில் இருப்பவனை யிங்கு அழைத்துக் கொண்டு வந்தானே யென்று அவள் சற்றேனும் கலவரமாவது, வெறுப்பாவது, சிந்தனையாவது கொள்ளவேயில்லை. ஏனெனில், அவனைப்பற்றி ஏதோ அவசியமான விஷயம் இல்லாவிட்டால் செல்வநாதன் அவனை யழைத்துவரமாட்டான் என்று அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் அவள் அவ்வாலிபனை மிக்க அன்போடு உபசரிப்பாளாயினாள். உடனே ஒரு நன்றாய் அலங்கரிக்கப்பட்ட அறையைச் சுத்தம் செய்து அந்த அறையை யவனுக்குக் காட்டி இதை நீ யுன் சொந்த வீடாகப் பாவிக்க வேண்டும் என்று கூறினாள்.

உடனே அவனுக்குக் காலைப்போஜனம் படைக்கப்பட்டது. அவன் அந்த வீட்டையும் அதில் இருக்கும் ஏற்பாடுகளையும் கண்டதே மிக்க சந்தோஷ மடைந்தான். பிறகு போஜனம் செய்தபோது அங்குப் படைக்கப்பட்ட உயர்தர ஆகாரங்களைக் கண்டதே ஆனந்த பாவசமடைந்துவிட்டான்.

காலையில் போஜனத்திற்குச் செல்லும் சமயம் காக்கிவந்து விட்டபடியால் போஜனம் செய்யாமலே வந்து விட்டதால் திருப்தியாய்ப் புசித்தான். இத்தகைய நாகரீகமும் நாணயமும் சுத்தமுமான இடத்தில் வசிப்பதும் இத்தகைய உயர்தர ஆகாரம் புசிப்பதுமே இவ்வுலகில் மரியாதையும் சுகமுமான வாழ்க்கையென்று அவன் மனதிற் பட்டது.

செல்வநாதன் அவனை நோக்கி, "நீ ஒரு களங்கமுமின்றி இதை யுன் வீடுபோல்பாவித்து நடக்கவேண்டும். உன்னையொரு பழைய நண்பன்போல் நடத்துவேனேயன்றி புதிதாய் அறிமுகமான மனிதனைப்போல் நடத்த எனக்குப் பிரியமில்லை. உனக்கு வேண்டியது இன்னதென்று நீ வாய் விட்டுக்கூற வேண்டியதுதான் தடை" யென்றான்.

வாலிபன் அவனுக்கு மிக்க வந்தனமளித்து மரியாதையோடு "இதற்கு மேலும் நான் கோரக்கூடியது ஒன்றுமில்லை" யென்றான்.

செல்வநாதன் அவனை நோக்கி, "என் வாலிப நண்பனே! இப்போது நான் உன்னோடு கொஞ்சம் சம்பாஷணை செய்ய விரும்புகிறேன். என்ன காரணத்தாலோ உன் க்ஷேமாபிவிருத்தியில் எனக்கு விருப்ப முண்டாயிருக்கிறது. நான் புதிதாய்ச் சொல்ப காலமாகவே உன்னோடு அறிமுகமானதாலேயே அந்த விருப்பம் அற்பமானதாயில்லை. ஆகையால் உன்னைப்பற்றிய சரித்திரத்தில் உனக்கு எவ்வளவு கவன மிருக்கிறதோ அதை யெனக்குக் கூறக் கோருகிறேன்" என்றான்.

வாலிபன் தன்னிடம் காட்டப்பட்ட அன்பினாலும் தனக்களிக்கப்பட்ட சேர்த்தியான ஆகாரத்தாலும் மிக்க சந்தோஷ மடைந்திருந்தான். அவன் செல்வநாதனை நோக்கி "முதலாவது எனக்கு இப்போதிருந்ததை விட வேறு பெயர் இருந்திருப்பதாய் எனக்குத் தெரியாது" என்றான்.

செல்வ:— "உன் தாய் தந்தையர் உனக்குத் தெரியாதோ?''

வாலிபன்:— "எனக்குக் தெரியவே தெரியாது; அதோடு நான் சிறு வயதிலிருந்து வளர்க்கப்பட்ட விடம் மிக்க அயோக்கியர்கள் கூடியிருக்கும்படியானவிடம். அதன் பெயர் காரிருள் கிடங்கு.

செல்வ:—"நான் கூறுவததென்ன வெனின், இப்போது நீ உன் சரித்திரத்தை யுள்ளபடி மனக்களங்கமின்றிக் கூறலாம். நீ செய்த கெட்ட காரியங்களாயினும் சரி. நீ யென்ன கெட்ட காரியங்களைச் செய்திருந்தாலும் என்னிடம்கூறச் சற்றும் அச்சப்படவேண்டாம்.ஏனெனில் உனக்கு உதவிசெய்ய வேண்டுமென்பதே யன்றி எள்ளளவேனும் கெடுதிசெய்ய வேண்டுமென்ற எண்ணம் என்னிடமில்லை. உன்னைப்பற்றி என்மனதில் ஒரு ஆலோசனை யிருக்கிறது. அதை நான் விவரித்துக் கூறினல் நீ சந்தோஷமே யடைவாய்; ஆனல் அது நீ எவ்வளவு களங்கமின்றி என்னிடம் மனம்விட்டுப் பேசுகிருயோ அதைப் பொறுத்ததாயிருக்கிறது. நீ என் சினேகிதத்திற்குப் பாத்திரவானென்று எனக்குத் தெரிந்தால் நான் உன் உண்மையான நண்பனகவே யிருப்பேன். இந்தா இன்னும் கொஞ்சம் இப் பானத்தை யருந்து. உன்சரித்திரத்தில் ஏதாவது மனவருத்தமான சம்பவங்கள் இருப்பினும் இம் மருந்து அவற்றைக் கூற உனக்கு நல்ல தைரியத்தை யளிக்கும்'' என்ருன்.

இம்மொழிகளைக் கேட்ட வாலிபன் செல்வநாதன் மேல் பின்னும் அன்புடையவனுகி "தாங்கள் சற்றும் சந்தேகமடைய வேண்டாம். நான் எனக்குத் தெரிந்த யாவும்

எள்ளளவும் களங்கமின்றி யும்மிடம் கூறிவிடுவேன்; இப்போது என்னைப்பற்றிய சங்கதி எனக்கு எதெது கவனத்திலிருக்கிறதென்று கேட்கிறீர். எனக்குத் தெரிந்தவரையில் என் சகவாசமனைத்தும் காளியப்பன் வீதியிலுள்ள பக்காகந்தன் என்பவனுடைய கூட்டத்திலேயே யிருக்கிறது. என்னைப்பற்றி நான் தெரிந்திருப்பதெல்லாம் கூடி, நான் குழந்தையா யிருக்கும்போதே என் தாய் தந்தையரிடமிருந்து களவாடப்பட்ட தாகவும் கமலம் என்பவளால் வளர்க்கப்பட்டது மாகவே'' என்றான்.

செல்வநாதன் "ஆ! அவளை நானறிவேன். அவள் அச்சிறுக்கள்ளர் கூட்டத்தின் தலைவனாகிய கந்தன் என்பவனுடைய வைப்பாட்டியா யிருந்தவள். இப்போதவன் கோபாலு என்ற பெயர் வைத்துக் கொண்டு இன்னும் இரத்னபுரியில் ஜீவித்துக்கொண்டிருக்கிறான். அவள்மட்டும் சில வருடங்களுக்கு முன் இறந்து போய் விட்டாள்.

ஜனகன்:—ஆம்; அவன் இப்பொழுது பழைய வழக்கங்களனைத்தும் விட்டு விட்டு ஒரு பலசரக்குக் கடை வைத்திருக்கிறானும். நான் கனகாத்தினம் என்பவளால் வளர்க்கப்பட்டாலும் என் இளம்பருவத்தில் அன்பு காட்டி யாதரித்தவர்கள் இராசப்பனும் கமாட்சியுமே.

செல்வநாதன்:—அவர்கள் எனக்குத் தெரியும். தானப்பனிடம் உன்னோடு கூட உதவியாய் வேலை செய்பவனே இராசப்பன். அவன் சகோதரியாகிய காமாட்சி தானப்பனுக்கு வைப்பாட்டியாயிருக்கிறாள். அவர்கள் தந்தை பதினெட்டுப் பத்தொன்பது வருடங்களுக்கு முன் சில பயங்கரமான குற்றங்களைச் செய்து விட்டுப் பிராணத்தியாகம் செய்துக் கொண்டான். இராசப்பன் தமை

யன் ஒரு பிரபுவைக் கொல்ல வெடி மருந்தெறிந்து அந்த விபத்தால் தானும் மடிந்தான்.

ஜன:—ஆம். ஆம். நானும் அப்படித்தான் கேள்விப் பட்டேன். இறந்துபோன அவனே என்னை எங்கோ கண்டெடுத்தோ, என் பெற்ரோரிடமிருந்து களவாடிக் கொண்டு வந்தோ அந்த வாலிபக் கள்ளர் வசிக்குமிடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தவன். அதுவரையில் உண்மையென்றே நான் உணர்ந்திருக்கிறேன். அப்படியாயினும் அந்தச் சிறு கள்ளர் கூட்டத்தில் அவனுடைய தம்பியும் தங்கையுமே என்னைத் தங்கள் சொந்தச் சகோதரன் போல் பட்சத்தோடு ஆதரித்து வந்தார்கள். அங்கிருந்து தானப்பன் எங்களைத் தன் குடும்பத்தில் கொண்டு வந்து சேர்த்துக் கொள்ளுமட்டும் நான் எத்தகைய வழியில் பயிற்சி செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதை நீரே யறிந்து கொள்ளலாம். தானப்பன் எங்களை யழைத்து வந்தது ஏழெட்டு வருடங்களுக்கு முன். அது முதல் நாங்கள் அவனிடமே யிருக்கிறோம்.

செல்வ:—அதுமுதல் நீங்கள் சுகமாகவும் சந்தோஷமாகவுமே யிருக்கிறீர்களென்ன்று நம்புகிறேன். அதோடு நீ வாசிக்கவும் எழுதவும் கற்பிக்கப்பட்டாய்.

ஜன:— அச்சங்கதியைக் கூறுகிறேன் கேளும். இராசப்பன் குடும்பத்தார் முதலில் நல்ல நிலைமையில் கௌரவமாகவே வாழ்ந்துகொண் டிருந்தார்கள். இடையில் எதிர்பாராத ஆபத்துகள் நேர்ந்ததனுல்தான் அவன் தாய் மனைவியாதியால் இறக்கத் தந்தையும் புத்திசபலமடைந்தார். இராசப்பன் சுமாராய் வாசித்திருக்கிறான். அவர்களுக்கு நேர்ந்த ஆபத்துகளே அவர்கள் நட

வடிக்கைகள் மாறியதற்குக் காரணம். கடைசியில் இராசப்பனும் அவன் சகோதரியும் நிராதவராய் அச்சிறு கள்ளர் கூட்டத்தோடு வசிக்க நேர்ந்தது. இருவரும் தினம் தங்கள் ஜீவனத்திற்காக யாசகம் செய்து கொண்டு அல்லது களவாடிக்கொண் டிருந்தாலும், இராசப்பன் தன் சகோதரிக்குப் படிக்கவும் எழுதவும் மட்டும் கற்பித்துக் கொடுத்தான். நாங்கள் தானப்பன் வீட்டிற்கு வந்தபின் இராசப்பன் பிரக்யாதிபெற்ற ஒரு கள்ளன் சரித்திரத்தை யெனக்கு வாசித்துக் காட்டினுன். அதுமுதல் நாமும் வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று எனக்கு மிக்க விருப்பமுண் டாயிற்று. இராசப்பன் மூலமாய் நான் கொஞ்சம் வாசிக்கத் தெரிந்து கொண்டதே என் சுய முயற்சியால் அதை விருத்தி செய்துகொண்டு நன்ருய் எதையும் வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டேன்.

செல்வ:—இதைத்தான் தானப்பன் தானே ஒரு உபாத்தியாயரை வைத்து உனக்குக் கல்வி கற்பித்ததுபோல் மிக்க பெருமையாய்க் கூறிக்கொண்டானே? நீ யவன் வீட்டில் இருக்கும்போது கல்வி கற்றுக்கொண்டதினுலேயே, அக்கௌரவம் தனக்குரியது என்று எண்ணிக் கொண்டே பெருமையாய்க் கூறிக்கொண்டான்போலும். ஆயினும் நீயே சிரத்தையோடு இவ்வளவாவது கல்வி கற்றுக்கொண்டது புகழத்தக்கதே. ஆனல் நீ வாசிக்கத் தேர்ந்தெடுத்த புத்தகங்கள் தகுதியானவைகளாய்த் தோன்றவில்லை.

ஜன:—"ஆனல் நான் எத்தகையவிடத்தில் சிறுவயதிலிருந்து வளர்ந்துவந்தேன் என்பதைச் சிந்தியுங்கள்" என்ருன்.

செல்வநாதனுடைய பூரண அன்பிற்கு நாம் பாத்திரவானுக வேண்டுமென்று வாலிபனுக்கு மிக்க ஆவலுண்டாயிற்று. ஏனெனில் செல்வநாதன் தனக்கு ஏதோ நன்மை செய்வதாய்க் கூறியதோடு, தன் ஆயுள்வரையில் களவு கொலை முதலிய துஷ்ட நடவடிக்கைகளைப் பற்றி வெறுப்பாய்ப் பேசியவர்களோடு அவன் சம்பாஷித்ததே கிடையாது.

செல்வ:—"உன் கெட்ட காலத்தால் நீ யிம்மாதிரி சகவாசத்தில் சிக்கிக்கொண்டதை நான் நன்ருய் உணர்கிறேன். ஏனெனில் என்தொழில் முறைமையில் துர் அதிர்ஷ்ட வசத்தால் இம்மாதிரி தகாத சகவாசங்களில் சிக்கிக் கொண்ட பரிதாபமான மனிதர்களை யான் அதிகமாய்ப் பார்த்திருக்கிறேன். இத்தகைய எவ்வளவோ விஷயங்களைக் காதாற் கேட்டும் கண்ணுற் பார்த்துமிருக்கிறேன். செல்வம் பொருந்திய நல்ல நிலைமையிலிருக்கும் கொஞ்சம்பேர், ஏழைகளாகிய பலர் விஷயத்தில் சற்றேனும் ஈவிரக்க மின்றி நடப்பதால் இந்த ஏழைகள் ஆகாரத்திற்கு வழியின்றிப் பலவிதத் துர் நடக்கைகளுக்கு ஆளாகி யழிந்து போகிருர்கள்'' என்ருன்.

இவ்வாறு அவன் மொழிந்ததைக் கேட்ட ஜனகன் மிக்க மனங்கரைந்து "ஆ! இரண்டு மூன்று வருடங்களாக என் மனதில் விபரம் தெரியாமல் இருந்த ஒரு விஷயத்திற்கு இப்போது தான் என் மனதில் உருவம் ஏற்படுகிறது. நான் ஒவ்வொரு வேளையில் என் துர் நடவடிக்கைகளை நினைத்து நாம் இவ்வாறிருக்காமல் யோக்கியனுகவும் மரியாதையுடையவனுகவும் இருந்திருக்கக் கூடுமா என்று சிந்திப்பதுண்டு. ஆனுல் நாம் கருதியிருந்தாலும் அவ்வாறிருந்திருக்க முடியாதென்றே என் மனதிற் படுவதே யன்றி இருந்திருக்க

லாகும் என்று தோன்றுவதில்லை. ஏனெனில் ஆகாரத்திற்கு வழியில்லாதபோது பிச்சை யெடுப்பது அல்லது திருடுவதை யன்றி வேறு வழியென்ன விருக்கிறது? ஓர் இராஜனுடைய குமாரனே நான் இருந்த நிலைமையிலிருந்தால் நான் எப்படி நடந்து கொண்டேனே அப்படியே தான் நடந்துகொண் டிருப்பான். நான் என்னென்ன அனுபவத்தை யடைந்திருக் கிறேனே அதே யனுபவத்தை யடைந்திருப்பான். கட்டிக் கொள்ள உடையின்றி, கடுங்குளிரில் போர்த்திக்கொள்ள ஒன்றுமின்றி, கடும் பசிக்கு எள்ளளவும் ஆகாரமின்றி அவதிப்படும் நிலைமை யெத்தகைய தென்று நான் நன்குய் உணர்ந்திருக்கிறேன். அப்போது திருடக்கூட எனக்குத் தெரியாது. என் கூட்டாளிகளோ களவு அகப்படாமலோ, அல்லது போலீசாருக்கு அகப்படாமல் தலை மறைந்து கொண்டே யிருப்பார்கள்.

அப்போது எனக்கு ஒன்பது வயது. ஒருதரம் நான் ஜீவனம் செய்ய வழியின்றி யிருப்பதாய் நியாயாதிபதி முன் கொண்டு போகப்பட்டேன். நியாயாதிபதி என்னை ஆறுமாதத்திற்குச் சீர்திருத்தும் சாலைக் கனுப்பிவிட்டார். அங்கு எனக்குப் போதுமான ஆகாரம் கூட அளிக்கப் படாததோடு, மிக்க குரூரமாக நடத்தப்பட்டேன். அதிலி ருந்து வெளியிலனுப்பப்பட்ட பின்பு திருடினதற்காக நியா யாதிபதி முன் கொண்டுபோகப்பட்டு மூன்று மாதங்கள் சிறைவாசம் செய்யும்படி தண்டிக்கப்பட்டேன். அங்கு எனக்கு நல்ல ஆகாரம் போதுமான அளவு அளிக்கப்பட்ட தோடு, நன்ருகவும் நடத்தப் பட்டேன்.

நான் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட்டபோது பிச்சையெடுத்துச் சீர்திருத்தச் சாலைக்குச் செல்வதை விடக் களவாடி சிறைச்சாலைக்குச் செல்வதே நலம் என்று எண்

ணிக்கொண்டேன். அதன் பிறகு கொஞ்ச நாட்களுக்குள் தானப்பன் வீட்டில் வந்து சேர்ந்தோம். இல்லாவிட்டால் இதுவரையில் நான் களவாடுவதில் நல்லபழுக்கமடைந்துவிட்டிருப்பேன். இப்போது என் பூர்வ சரித்திரத்தைத் தாங்க ளறிந்துகொண்டபடியால், களவாடிச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த என்னைக்கூட வைத்துக்கொள்ளவும் வெறுப் படைவீர்கள்.

இவன் மொழிகளைக்கேட்ட செல்வநாதன் உடனே "வாலிபனே நீ யொருகாலும் அப்படி நினைக்கவேண்டாம். உன் உண்மைச் சரித்திரத்தைக் கேட்டதால் நான் உன் விஷயத்தில் முன்னிலும் அதிக பரிதாபமடைகிறேனே யன்றி சற்றேனும் வெறுப்படையவில்லை. இப்போது நீ கூறிய விஷயங்கள் உன்மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்கத் தக்கவை. ஆதலின் அவற்றை யிதோடு நிறுத்துவோம். இப்போது நான் கூறும் என் சரித்திரத்தின் சில விஷயங்களைக் கேட்டால் உன் மனதிற்குச்சந்தோஷமும் உற்சாகமும் உண்டாகும்" என்றியம்பி,தான் பிடித்த இரண்டொரு பிரக்யாதி பெற்ற கள்ளரைப்பற்றியும் தான் அவர்களைப் பிடித்த அதிசயமான விதங்களையும் விவரங்களையும் பற்றியும் கூறத் தொடங்கினன்.

ஆனல் நண்பர்களே! இப்போது நாம் இவர்களிருவரையும் அந்த நிலைமையிலேயே யிருக்க விட்டுவிட்டு, இதைவிட முக்கியமானவையும் அதிக பிரியத்தைத் தாக்கூடியவையுமான வேறு சில விஷயங்களைக் கவனிக்கவேண்டியிருப்பதால் அவற்றைப்பற்றிக் கூறுவோம்.

## 29-வது அத்தியாயம்

மேலே நாம் இப்போது கூறும் சம்பவங்கள் வியாழக்கிழமை நடந்தவை யென்றும், முன்பு ஜாடித்தீவில் நேர்ந்த விஷயங்கள் புதன்கிழமை நேர்ந்தவை யென்றும் நினைவில் வைத்திருப்பீர்களென்று நம்புகிறோம்.

வியாழக்கிழமை காலை சுமார் பத்து மணிக்கு ஜகதீசன் இரத்தினபுரியில் தான் இறங்கி யிருந்த ஹோட்டலை விட்டு வெளியில் புறப்பட்டான். அதற்கு முன்தினம் கற்பகவல்லி தங்கியிருந்த வீட்டில் சென்று விசாரித்தபோது அவள் பச்சையப்பப்பிள்ளை, அவர் மனைவி இவர்களோடு நகரை விட்டு எங்கேயோசென்றிருப்பதாய்க் கேள்விப்பட்டான். அதோடு அன்று மாலையே யவர்கள் பெரும்பாலும் திரும்பி வந்து விடுவார்கள் என்று அவ்வீட்டிலிருந்த வேலையாள் கூறியதால், கோமளவல்லி தன் தமக்கைக்கு எழுதியனுப்பிய கடிதத்தை வேலையாளிடமளித்து, கற்பகவல்லி வந்ததே யக்கடிதத்தை யவளிட மளிக்கும்படியாகவும், தான் மறுநாள் காலை வருவதாய்க் கூறும்படிக்கும் சொல்லியிருந்தான்.

அதன்படியே யவன் மறுநாள் காலை சுமார் பத்து மணிக்கு, நாம் மேலே கூறியபடி ஹோட்டலிலிருந்து புறப்பட்டுக் கூடியவரையில் குறைந்த தூரமுள்ள மார்க்கமாகவே செல்லக் கருதிக் குறுக்கு வீதிகளின் வழியாய்த் துரிதமாய்ச் சென்றுகொண் டிருந்தான். அவன் ஒரு வீதியைக் கடந்து இன்னொரு வீதியில் திரும்பும்போது ஒரு நாணயமான கன்னிகை மிக்க துரிதமாய்த் தன்னைக் கடந்து செல்வதைக் கண்டான் அவள் முகக்குறியையும் அவள் செல் மாதிரியையும் நோக்க அவள் பயித்தியமாவது கொண்

டிருக்கவேண்டும் அல்லது ஏதோ துயரத்தால் புத்தி சாபல்யமடைந்துவிட் டிருப்பவளா யிருக்கவேண்டும் என்று அவன் மனதிற் பட்டது.

அக்கன்னிகை அவ்வாறு துரிதமாய்ச் சற்று தூரம் சென்றதும் தட்டென்று நின்று ஏதோ சிந்திப்பவள் போல் சற்று மயங்கி யிருந்து உடனே ஸ்மரணை யிழந்து விழப் போகிறவள் போல் தள்ளாடி அருகிலிருந்த ஒரு வீட்டின் வெளியிலுள்ள இரும்புக் கிராதியைத் தாவிப்பிடித்துக் கொண்டாள்.

அவள் மிக்க அழகுடையவளாகவும் பதினாறு பதினேழு வயதிற்கு அதிகப்படாதவளாகவும் தோன்றினாள். அவள் உடைகள் நல்ல நாணயமான உடைகளாகவே யிருந்தன. ஆனால், பிரயாணத்தால் தூசு படிந்து மலின மடைந்திருப்பதுபோல் தோன்றின. உண்மையாகவே நெடுந்தூரம் கால்நடையாய்ப் பிராயாணம் செய்தவளாகவே தோன்றினாள். இதனாலும் மிக்க மனோவியாகூல முடையவள் போல் தோன்றிய அவள் முகக்குறியாலும், அவள் ஏதோ ஆபத்தில் சிக்கிக்கொண்டு மிக்க மனக் கலவரமும் திகிலுமுடையவளாய், அனாதாவாய், உதவி யவசியம் வேண்டிய நிலையிலிருக்கிறாளென்று ஜகதீசன் மனதிற்குப் புலப்பட்டது.

அவனுடைய இரக்கமான மனமானது, நாம் இவளுக்கு ஏதாவது உதவி செய்யக் கூடுமா என்று உடனே சிந்திக்கலாயிற்று. அந்தப் பெரிய நகரில் உலக அனுபவமறியாதவளும், முன் பின் அங்கு வாராதவளுமாகிய ஒரு கன்னிகை நிராதாவாய் அங்குச் சிக்கிக் கொண்டால் அவள் எத்தகைய ஆபத்துகளுக் குள்ளாவாளென்பதை யவன் நன்கறிவான்.

ஆகையால் அவன் அவளை யுடனே மெதுவாய்க் கூப்பிட்டான். ஆனால், அவளுக்கு அது கேட்கவில்லை. அவள்

கிராதியின்மேல் கரத்தை வைத்துச் சாய்ந்தபடியே யிருந்தாள். அவன் அருகிற் செல்லும்போது அவள் "இல்லையில்லை. நான் அவனிடம் போகவேமாட்டேன். அவன் சதியாலோசனைக்காரரில் ஒருவன். அவனும் மற்றபேர்களைப் போல் பாம துஷ்டனே" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டாள். அவ்வாறு கூறியதும் துக்கத்தை யடக்க முடியாமல் தேம்பி யழத் தொடங்கினாள். பிறகு சட்டென்று திரும்பி வந்த வழியே செல்ல முயன்றவள் ஜெகதீசன் அருகில் நின்று தன்னை மிக்க பரிதாபமான பார்வையோடு உற்று நோக்கிக்கொண் டிருப்பதைக் கண்டாள். உடனே "ஓகோ! நாம் கூறிய வார்த்தைகள் இம்மனிதன் செவிகளில் விழுந்திருக்கும் என்று அவள் மனதிற் பட்டது. ஒரு புது மனிதனுக்குத் தன் நிலைமை வெளியாய்விட்டதை யுணர்ந்ததே யவள் மனதில் மிக்க நாணமும் கலவரமும் உண்டாய் விட்டது.

ஜெகதீசன்:—"அம்மா! ஒரு புதுமனிதன் முன் பின் அறிமுகமில்லாதவனாகிய நான் உன்னிடம் பேசத் துணிந்ததற்காக என்னை மன்னிக்கக் கோருகிறேன். நீ வழி தவறிப்போயிருந்தால், அல்லது நான் உனக்குச் செய்யக்கூடிய உதவி யேதேனுமிருந்தால்......" என்பதற்குள்,

அக்கன்னிகை "ஆம் அய்யா ஆம் எனக்கு உதவி வேண்டியதே. தாங்கள் உண்மையான மனிதராயிருந்தால்.........அடடா! தாங்கள் காட்டிய இரக்கமுடைய களங்கமற்ற உள்ளத்திற்குப் பதில் நான் இம்மாதிரி பேசுவது மிக்க அநீதம்......" என்றாள்.

அதற்குள் ஜெகதீசன் மிக்க இரக்கத்தோடு "அம்மா! நீ மிக்க துயரமும் திகிலும் நிறைந்த மனதோடிருக்கிறாய்.

ஆகையால் நீ இப்போது கலவரத்தால் என்ன கூறினும் நான் எள்ளளவும் கோபமடைய மாட்டேன். நான் உண்மையைக் கூறுகிறேன். நான் ஒரு கண்ணியமான பெரிய மனிதனே. சத்தியமான நெறி யுடையவன். உன் நிலைமையைக் கண்டு உணர்ந்து கொண்டேனாதலால் உனக்கு வேண்டிய உதவியைச் செய்யாமலிருக்க என் மனம் தாளவில்லை" என்றான்.

கன்னிகை:—"ஆம்; நான் உமது வார்த்தைகளை நம்புகிறேன். ஆனால் தாங்கள் எனக்கு என்ன உதவி செய்ய முடியும்;" என்று கூறியதும் துக்கத்தைப் பொறுக்க முடியாமல் கதறி யழுதாள்.

ஜெகதீசன் "அம்மா! நீ யிப்போது நான் செய்யக்கூடிய உதவி ஏதோ விருக்கிறதென்று கூறியபடியால், அது என்னால் சாத்தியமாகாததா யிருந்தாலன்றி, அது எதுவாயிருந்தாலும் நான் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான்.

கன்னிகை:—"அய்யா! எனக்கு நிம்மதியான வாஸஸ்தலத்தையளிக்கத் தங்களுக்கு அனுகூலப்படுமா? அந்த இடம் என் மானத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றக் கூடியதாயிருக்குமா? ஓ இல்லை இல்லை. நான் தங்களுக்கு அவ்வளவு கஷ்டத்தைத்தா பாத்தியமுடையவளல்ல. சத்தியாய் ஒரு மரியாதையான விடத்தில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்தால் மிக்க நன்றியுடையவளாயிருப்பேன். நான் பார்வைக்கு அனாதை போலிருந்தாலும் தற்சமயம் எனக்கு நேரிடும் செலவை நானே சமாளித்துக் கொள்வேன்" என்றாள்.

ஜெகதீசன்:—"அம்மா! நாம் சம்பாஷிப்பதை வழிப்போக்கர்கள் கவனிக்கிறார்கள். அதோ ஒரு காலிவண்டி

வருகிறது. அதில் ஏறிக்கொள். முன்னே மரியாதை யான ஒருவிடத்தில் போய்ச் சேருவோம். அங்கு நிதானமாய்ப் பேசலாம்" என்றான்.

அவ்வாறே இருவரும் அவ்வண்டியில் ஏறிக்கொண்டு மரியாதையான ஒரு ஹோட்டலை யடைந்தார்கள்.

அங்குச் சேர்ந்ததே ஜெகதீசன் அக்கன்னிகையை நோக்கி, "அம்மா! நான் சொல்ப காலமே இந்நகரத்தில் தங்கியிருப்பேன். இப் பெரிய நகரத்தில் எனக்குக் காயமான வாசஸ்தலமில்லை. இந்த ஹோட்டல்காரன் மனைவி மிக்க மரியாதையும் யோக்கியமுமான மாது. அவள் வசத்தில் உன்னை யொப்புவிக்கிறேன். நான் ஒரு விடத்திற்கு அவசியமாய்ச் சென்று ஒருவரைக் காணவேண்டும். ஆயினும் சீக்கிரமாய்த் திரும்பிவந்துவிடுவேன். அதற்கிடையில் நீ சற்று மனோநிம்மதி யடையலாகும். நான் வந்த பிறகு உன் சங்கதியைக் கூறினால் தக்கபடி யோசனை செய்யலாகும். அப்போதுதான் நான் உனக்கு எத்தகைய மாதிரியாய் உதவி செய்யலாகும் என்பது விளங்கும்" என்றான்.

அக்கன்னிகை "ஓ! தங்களுடைய உதாரமும் இரக்கமும் பெருந்தன்மையுமான குணத்திற்குத் தக்க நன்றியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். ஆனால் ஓ! என்னைப் பற்றி தாங்கள் கெட்ட அபிப்பிராயம் கொள்ளவேண்டாம். நான் இப்போது நிராதரவாகவும், அனாதையாகவும் இத்தகைய நிலைமையில் இருப்பதைக் கருத வேண்டாம். என் சரித்திரத்தைக் கேட்டால் மிக்க வியாகூலமாயிருக்கும். ஆனால் என் நடக்கையில் எள்ளளவாவது குற்றமிருக்குமென்று மட்டும் தாங்கள் கருதவேண்டாம் என்று கோருகிறேன்" என்றாள்.

ஜெக:—"நீயுன் விஷயத்தைப்பற்றி எள்ளளவும் கலவரமடையவேண்டாம். நான் உன்னைக் கொஞ்ச நேரமே

பார்த்தபோதிலும் உன் நடக்கையைப்பற்றி நான் எள்ளளவும் சந்தேகப்படவில்லை; நான் திரும்பிவந்ததே நீயுன் சங்கதிகளைப் பற்றி என்னிடம் கூறலாம். ஆனால் உனக்குப் பிரியமிருந்தால் கூறு. நீ யவற்றையெல்லாம் கூறினால்தான் நான் உனக்கு உதவி செய்வேன் என்று நான் நிபந்தனை கூறுவதாய்க் கருதாதே. அல்லது உன்னிடம் ஏதாவது பிரதியுபகாரம் எதிர்பார்த்து உனக்கு உதவிசெய்யக் கருதுகிறேன் என்று நீ நினைக்கவேண்டாம்'' என்றான்.

அதற்குள் அக்கன்னிகையின் மனம் ஒருவித நிம்மதியடைந்தது. ஜெகதீசன் விஷயத்தில் அந்த ஹோட்டல்காரி மிக்க மரியாதையுடையவளாதலால் அவன் கூறியவுடனே அவள் அக்கன்னிகையை மிக்க அன்போடு ஏற்றுக்கொண்டு உபசரித்தாள். ஜெகதீசன் கன்னிகையை ஹோட்டலில் விட்டு விட்டு உடனே வண்டியேறி கற்பகவல்லியின் வீட்டை நோக்கிச் சென்றான்.

அவன் கற்பகவல்லி வசிக்கும் வீட்டிற்குச்சென்று விசாரித்ததே அவள் வீட்டிலிருப்பதாய்க் கேள்விப்பட்டான். சற்று நேரத்திற்குள் அவன் மிக்க நாகரிகமாகவும் நேர்த்தியாகவும் அலங்கரிக்கப்பட்ட ஒருஅறையில் கொண்டு போய்விடப்பட்டான். மறுகிமிடம் யாவரும் வியப்படையத்தக்க மிக்க வனப்புடைய வதனத்தையும், கெம்பீரமான தோற்றத்தையு முடைய ஒரு வாலிபமாது தன்னை நோக்கி அன்பு நிறைந்த முகக்குறியோடு வருவதைக் கண்டான். கற்பகவல்லியோகாண்போர்மனதைக் கவரத்தக்க கெம்பீரமான முகமும் பெருந்தன்மையான தோற்றமுமுடைய ஒரு வாலிபனைக்கண்டாள்.

முதல் முதல் இருவரும் சந்தித்தபோதே ஒருவரைப் பற்றி யொருவர் பரஸ்பரம் நல்ல அபிப்பிராயமும் பிரியமும் கொண்டார்கள். கற்பகத்திற்கும் வந்திருப்பவன் தன் தங்கையை மணம்புரிய ஏற்பாடு செய்திருக்கும் ஜெகதீசன் என்று தெரியும். ஆகையால் கற்பகவல்லி யவனுக்கு மனப் பூர்வமாக அன்போடு நல்வரவு கூறி யவனை யாசனத்தில் இருக்கச்செய்ததும் இருவரும் சம்பாஷிக்கத் தொடங்கி னார்கள்.

கற்பகவல்லி தன் தங்கையைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டதோடு தன் தங்கையை விட்டுப்பிரிந்த துயரத்தைக் கண்ணீரால் வெளியிட்டாள். அதோடு பச்சையப்பப் பிள்ளையும் அவர் மனைவியும் தன்மேல் மிக்க அன்புவைத் திருப்பதால் தன்னைச்சேர்ந்தவர்கள் மேலும் அன்புவைத் திருப்பதாகவும், இப்போது ஜகதீசனைக்காண மிக்க விருப்ப முடையவர்களா யிருந்தாலும் பிரயாண அலுப்பால் இப் போது சக்தியற்றிருக்கிறார்க ளென்றும், ஆயினும் கூடிய சீக்கிரத்தில் ஜெகதீசனையும் கோமளவல்லியையும் காணத் தவிர மாட்டார்களென்றும் கூறினாள்.

ஜெதீசன் "எங்களுக்கு மணம் நடக்கும்போது நீ கந்த புரிக்கு வரத் தவிரமாட்டாயென்று நம்புகிறேன்" என்றான்.

கற்பகவல்லி:— அத்தகைய சந்தோஷமான சந்தர்ப்பத்தில் எந்தச்சம்பவமும் என்னைக் கந்தபுரிக்குவாராமல் தடுக்க முடியாது. பச்சையப்பப் பிள்ளையும் அவர் மனைவியும் என்மேல் புத்திரிவாஞ்சை கொண்டதோடு என்னைத் தங்கள் தத்து புத்திரியாகப் பாவித்துக்கொண்டார்கள். இதுமட்டு மல்ல; தங்கள் சொத்து முழுமைக்கும் என் னைச் சுதந்தரக்காரியாக மதித்திருக்கிறார்கள். அவர் கள் என்னிடம் எதிர்பார்ப்ப தெல்லாங் கூடி நான்

அவர்களை விட்டுப் பிரியக்கூடாதென்பதே. அத்தகை யோருடைய விருப்பத்திற்குச் சற்றும் மாருக நடக்க எனக்கு மனம் வாராததே நான் சொற்பகாலங்கூட அவர்களைப்பிரிந்து என் அருமையான தங்கையைக் காண கந்தபுரிக்கு வாராததற்குக் காரணம்.

இம்மொழிகளைக் கேட்ட ஜெகதீசன் கற்பகவல்லியின் நடத்தையை மிக்க மேலானதாக மெச்சிக்கொண்டு அவள் நடந்து கொள்ளும்மாதிரி மிக்க தகுதியானதேயென்று கூறினன். இவ்வாறே யிருவரும் ஒரு மணி நேரத்திற்கதிகமாக பேசிக்கொண் டிருந்தார்கள். ஆரம்பத்திலேயே யிருவருக்கும் பரஸ்பரப் பிரியமுண்டாய் விட்டதால், மேல்கண்ட சம்பாஷணையால் அவர்கள் அன்பு உறுதிப்பட்டு விட்டது.

கடைசியில் ஜெகதீசன் தான் போய்வருவதாய்க் கூறிய போது, கற்பகவல்லி தான் தன் தங்கைக்கு ஒரு கடிதமும் சிறு பரிசும் கொடுக்க விரும்புவதாகவும் கூறி அதை யவன் தயவுசெய்து எடுத்துக்கொண்டு போய் கோமளவல்லியிடம் அளிக்க வேண்டுமென்று கோரிக்கொண்டாள். ஜெகதீசன் அவ்வாறே யொப்பிக்கொண்டதும் கற்பகம் ஒரு கடிதமும் ஒரு சிறு பெட்டியில் ஏதோபரிசும் அவனிடமளித்தாள். அதன்மேல் ஜெகதீசன் விடைபெற்றுக்கொண்டு அவள் இல்லத்தை விட்டுப் புறப்பட்டான்.

கற்பகவல்லி சந்தோஷமான வதனத்தோடு வீதிவரையில் சென்று அவனுக்கு உபசாரத்தோடு வழிகாட்டி விட்டுத் திரும்பித் தன் அறைக்குள் வந்ததும் கதவைமூடித் தாளிட்டுக் கொண்டு மஞ்சத்தில் சாய்ந்து அடங்காத்துயரத்தோடு தேம்பித் தேம்பி யழத் தொடங்கினள். இதுகாறும் ஜெகதீசன் முன் தன் துயரத்தை மிக்க சாமர்த்தியத்தோடு அடக்கிக்கொண்டு, மிக்க நிம்மதியோடும் சந்தோஷத்தோடும்

இருப்பவள்போல் அபிநயம் செய்தாள். அவ்வளவுக் கவ்வளவு அவள் துயரம் இப்போது வெளிகிளம்பி விட்டது.

ஜெகதீசன் கற்பகவல்லியின் வீட்டிலிருந்து புறப்பட்டு தான் வழியிற் சந்தித்த கன்னிகையை விட்டுவந்த ஹோட்டலுக்குச் சென்று ஹோட்டல்காரியை நோக்கி அக்கன்னிகையைப்பற்றி விசாரித்தான். அம்மாது அக்கன்னிகைப்பெரும்பாலும் மனோசாந்தியடைந்து நிம்மதியான நிலைமையிலேயே இருக்கிறாள் என்று கூறினாள்.

அதைக்கேட்டதே ஜெகதீசன் மனதிற் சந்தோஷமடைந்து அக்கன்னிகை யிருக்கும் அறைக்குச் சென்றான். அவனைக் கண்டதே அக்கன்னிகை தன் கண்களில் நீர் பெருக, அவனுடைய பெருந்தன்மையான உதார குணத்திற்காகத் தன் நன்றியறிதலை வெளியிட்டு "இப்போது என் மனம் ஒருவாறு சாந்தமடைந் திருப்பதால் நான் தங்களிடம் வெளியிடக் கருதி யிருக்கும் என் சரித்திரத்தை ஆதியோடந்தமாய்க்கூற ஆயத்தமாயிருக்கிறேன்" என்றாள்.

ஜெகதீசன் சந்தோஷத்தோடு அவளருகில் உட்கார்ந்த உடனே அவள் மிக்க மரியாதையோடு கீழ்க்கண்டபடி மொழியத் தொடங்கினாள்:—

---

## 30-வது அத்தியாயம்.

நாம் முன் அத்தியாயத்திற் கூறியபடி அக்கன்னிகை தன் சங்கதியைப் பின் வருவாறு கூறினள்:—

"அய்யா! இந்த ஹோட்டல்காரி தங்கள் பெயர் குணம் முதலிய யாவும் என்னிடம் கூறினள். ஆகையால் நான் தங்களிடம் பூரண நம்பிக்கை கொண்டு விட்டேன். என் சரித்திரம் முழுமையும் களங்கமின்றித் தங்களிடம் கூறத் துணிந்ததோடு, இனி தங்கள் புத்திமதியின்படி நடக்கத் தீர்மானித்துக் கொண்டேன். தாங்கள் காட்டிய பேரன்பும் இரக்கமுமே தங்களுக்கு இத்தொந்திரை கொடுக்கும்படி எனக்குத் தீரமளித்தது. ஆகையால் தயவுசெய்து என் அபூர்வ சரித்திரத்தைக் கவனமாய்க் கேட்கும்படி தங்களை வேண்டிக் கொள்கிறேன். அது முழுமையுங் கேட்டபோது, அதில் மிக்க அக்கிரமமும் பயங்கரமுமான சங்கதிகளடங்கியிருந்த போதிலும், நான் சுத்த நிரபராதியென்றும் தங்கள் இரக்கத்திற்கும், தாங்கள் காட்டும் உதார குணம் பொருந்திய கௌரவம் பொருந்திய அன்பிற்கும் உதவிக்கும் நான் பாத்திரமானவளே யென்பது நன்கு விளங்கிவிடும்......"

இவ்வாறு அவள் கூறும்போதே அவள் உண்மைபேசுபவளென்றும், நிரபராதியாகிய யோக்கியவதியென்றும் ஜகதீசன் மனதிற்குப் புலப்பட்டதால் முன்னமே அவள் விஷயத்தில் அவனுக்குண்டாயிருந்த நம்பிக்கையும், இரக்கமும், அன்பும் அதிகமாகியது. அவன் அவளுக்குத் தேறுதலையும், உற்சாகத்தையும் உண்டாக்கத்தக்க மொழிகளைக் கூறியதால் அவள் பின்னும் உற்சாகத்தோடு தன் சரித்திரத்தைக் கூறத் தொடங்கினள்.

"என் தாயார் பெயர் மாகதம்மாள். அந்தம்மாளுக்கு நான்கு புத்திரிகள். நான் கடைசிப் புதல்வி. என் பெயர் மீனும்பாள். நேற்றுவரையில் என் தாயார் சகோதரிகளோடேயே வசித்துக்கொண் டிருந்தேன்......." என்று அவள் கூறியபோது, ஜெகதீசன் திடுக்கிட்டு "ஆ! அவர்களைப்பற்றி கேள்விப்பட் டிருக்கிறேன்" என்றான்.

மீனும்பாள்:— "அப்படியாயின், இளவரசனும் அவனுடைய நெருங்கிய சிநேகிதராகிய சில பிரபுக்களும் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவதென்றும் அதனால் நாங்களெல்லாம் அகௌரவமானபெயரை யடைந்திருக்கிறோ மென்றும் தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்" என்றான்.

ஜெக:— "ஆம்,ஆம்; நீ கூறும் அந்த விஷயமனைத்தும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்த ஆசாமிகளில் சுகசிங்கம் பிரபு ஒருவனல்லவா?" என்று கேட்டான்.

மீனும்:—"ஆம், ஆம்; தயவுசெய்து என் கதையை நான் சொல்லுகிற கிரமப்படி சொல்லும்படி அனுமதி கொடும். அப்போது இளவரசர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து என் தாயாரிடம் சிநேகம் கொண்டிருந்ததன் மூலகாரணமாகிய பயங்கர விஷயம் இன்னதென்று தங்களுக்கு நன்றாய் விளங்கும். அதோடு இளவரசன் மனைவி மணம்புரிந்து கொள்ள இந்த நாட்டில் வந்திறங்கியது முதல் இளவரசன் தாயாகிய இராணி அவள் மேல் தீராப்பகை கொண்டதும் தெரியும்.

பத்தொன்பது வருடங்களுக்கு முன் அந்த இராஜகுமாரி நமது இளவரசனை மணம்புரிந்து கொண்டாள். மறு வருடம் ஒரு புத்திரியை யீன்றாள். அதுமுதல் மாமியா

ருடைய அகாரணமாகிய பகையால் அவளுக்கு இடையூறு செய்யப் பலவித சதியாலோசனைகள் நடந்து கொண்டே வருகின்றன. முதலாவது இளவரசனே தான் அரசனாகும் போது அவள் இராணியாக வரக்கூடாதென்று சபதம் செய்துகொண் டிருக்கிறான். அவன் தாயாகிய இராணி அதற்கு முதற்றுணையாயிருக்கிறாள். இவர்கள் பலதரம் நிர பராதியாகிய அந்த இராஜ குமாரிக்கு அழிவை யுண்டாக்க முயன்றார்கள். ஆனால் அவள் தன் நேர்மையான நடக்கை யாலும் கற்பினாலும் புத்தி சாமார்த்தியத்தாலும் இவர்கள் உண்டாக்கும் ஆபத்துக்களில் சிக்காமல் தப்பிக்கொண்டே வந்தாள். இப்போது இளவரசனோடு மற்ற இராஜ புத்திரர் களும், பரமதுஷ்டர்களும் சுத்த அயோக்கியர்களுமாகிய சில பிரபுக்களும் கூடிக்கொண்டு ஒரு பெரிய சதியாலோ சனை செய்துகொண் டிருக்கிறார்கள். இப்போ தவர்கள் அப் பரிதாபமான இளவரசியின் மேல் பெரிய அபாண்டத் தைப் போட்டு அவள் விபசாரியாய் விட்டதாய் உலகத் திற்கு மெய்ப்பித்து அவளை யடியோ டழித்து விட மிக்க சாமர்த்தியத்தோடு தங்கள் சதியாலோசனையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை யவர்கள் நிதானமாய் நடத்தி னாலும் தங்கள் ;எண்ணம் கைகூடுவது நிச்சயம் என்று நம்பிக்கொண் டிருக்கிறார்கள்......" என்றாள்.

ஜேக:—"அடடா! அய்யோ கடவுளே! பூரண செல்வத் தோடு உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் குடும்பங்களில் கூட இத்தகைய நெஞ்சு நடுங்கும் விபரீத சம்பவம் கூட நடக்குமோ! கடவுளே! அந்த நிரபராதியாகிய பரிதாபமான இளவரசியை யித்தகைய ஆபத்திலிரு ந்து காப்பாற்றிவிட எனக்குமட்டும் கொஞ்சம் வழி கிடைத்தால்......" என்றான்.

மீனும்:—"ஆ! அதற்கு வழிமட்டுமல்ல, வேண்டிய ஆயுதங் களும் வழிகளும் யாவும் தங்களுக்குக் கிடைக்கும்; ஆம் பூரணமாய்க் கிடைக்கும். அந்தப் பரிதாபமான மாதை யித்தகைய ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற பெருந்தன்மையான உதாரகுணமும், தைரியமும், விருப்பமுமுடைய தங்களைப்போன்ற உத்தமரை நான் சந்திக்கும்படி நேர்ந்த அதிட்டத்திற்காகக் கருணாநிதி யாகிய ஆண்டவனை என்னுயிருள்ளமட்டும் வாழ்த் திப்போற்றக் கடமைப்பட்டவளா யிருக்கிறேன்" என் றாள்.

ஜெகதீசன் மனதில் மிக்க இரக்கம்கொண்டு மீனும் பாளை நோக்கி "அம்மா இனி நீ யுன் சரித்திரத்தைத் தொட ங்கு. அத் துக்ககரமான சங்கதி முடியுமட்டும் நான் எப்படி யாவது என் மனதில் உண்டாகக்கூடிய துயரத்தையும், கோபத்தையும் எப்படியாவது அடக்கிக்கொண்டிருக்கி றேன்" என்றான். அதன்படியே மீனும்பாள் கூறத்தொடங் கினாள்.

"அப்பரிதாபமான இளவரசியை யடியோடு அழிக்கச் செய்யும் முயற்சிகளில் ஒன்று முக்கியமானதாகவும் முத லானதாகவும் கருதப்பட்டது. அதாவது சில உளவாளிகளை யவளிடம் தோழிகளாக அமர்த்திவைக்க வேண்டுமென் பதே. இந்த யோசனை சில வருடங்களுக்குமுன் சுகசிங் கம் பிரபுவால் முதல்முதல் பிரேரேபிக்கப்பட்டு இளவரச னால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்காக முன்னடியாக வே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சில சகோதரிகளையே அதற்காகத் தயார் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. ஏனெனில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேண்டிய போதனைகளைச் செய்தனுப்பினால் அவர்கள்

அங்கு நடந்து கொள்ள வேண்டிய, வஞ்சகம், சூது, தந்திரம், இரக்கமின்மை முதலியவை யடங்கிய நடவடிக்கைகளில் ஒருவரோடொருவர் ஒற்றுமையாய் மனமொப்பி நடப்பார்கள். அதனுல் இச் சதியாலோசனையின் நோக்கம் தங்கு தடையின்றிச் சரியாய் நிறைவேறும். சங்கதியும் வெளியில் செல்லாது. அப்படிக்கின்றி ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத மூன்று நான்கு பேர்களை யொன்று சேர்த்தனுப்பினுல், பொருமை முதலிய பல காரணங்களால் சங்கதி வெளிப்பட்டுவிடும். ஒருவர் தன் வேலையில் இருக்கும் கொடுமை, அக்கிரமம், சதி, துரோகம் முதலியவற்றிற்கு மனமொப்பாமல் அதைவிட்டு நீங்கி விடுவதோடு சங்கதியையே இளவரசி யிடமாவது வேறு அன்னியரிடமாவது வெளியிட்டு விடுவார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பின் தன் குடும்பத்தவர்களுக்கு நேரிடும் அவமானத்திற்கஞ்சிச் சங்கதியை வெளியிடத் துணியமாட்டார்கள். இதுவே சதியாலோசனைக்காரர்களின் கருத்து. என் தாய் இளவரசிக்குக் கடிதம் எழுதியதன் மேல் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டாய் விட்டன. சதியாலோசனைக்காரர்களுடைய வேலையாவது, எனக்கும் என் சகோதரிகளுக்கும், எல்லாவித சூது, தந்திரம், நயவஞ்சகம் முதலியவற்றையும் போதித்து, எங்களுடைய கற்பைக் கெடுத்துக் கொள்ளாமலே நாங்கள் சற்றேனும் ஈவிரக்கமின்றி மேற்கண்ட துர்வழிகளில் நுழைந்து நடக்கும் வண்ணம் எங்கள் மனங்களைப் பயிற்சி செய்விக்க வேண்டுமென்பதே. இப்பயிற்சி நான்கு வருடகாலம் நடந்தது. முதல் முதல் என் பெரிய தமக்கை வேண்டிய யாவும் கற்றுக் கொண்டாளென்றும், அவள் மனம் அவ்வழியில் திரும்பிக் குறித்த தொழிலைச் செய்ய பூரணமாய் ஆயத்தப் படுத்தப் பட்டு முடிந்தது என்றும், அறியப்பட்டதே, இவ்வளவு பயிற்சியும் எதற்

காக நடந்தது என்ற உண்மை யிரகசியம் அவளுக்குப் போதிக்கப்பட்டது. அதன் பின் அவ்வாறே பிறகு என் இரண்டாவது தமக்கைக்கு உண்மை வெளியிடப்பட்டது.

இப்படியே படிப்படியாய் வந்தபின் கடைசியாய்க் கடந்த செவ்வாய்க்கிழமைதான் மெதுவாய் எனக்குச் சங்கதி வெளியிடப்பட்டது. அய்யா! அந்தக் கோரத்தையும் அநீதத்தையும் என்னென்றுரைப்பேன். நாங்கள் நால்வரும் மேலுக்கு இளவரசியின் தோழிகளாக அவளிடம் போய்ச் சேரவேண்டிய தென்றும், ஆனால் எங்களுடைய உண்மையான வேலை யவள்மேல் சதா வேவு பார்த்திருந்து எங்கள் தந்திரசாமார்த்தியங்களால் அவளுடைய அந்தரங்க நண்பர்களென்று அவள் நம்பும்படி யபிநயம் செய்து கொண்டிருந்து சமயம் பார்த்து அவள் விபசாரம் செய்தாள் என்று நிரூபிப்பதற்குப் போதுமான அத்தாட்சிகளை யுண்டாக்க வேண்டியதென்று என் செவிகளில், என் சொந்தத் தாயாரே கூறியதைக் கேட்டபோது, அய்யோ கடவுளே! என் மனம் பட்ட வேதனை யின்னவிதமென்று கூறவியலாது. என்னைத் திடீலென்று இரௌரவாதி நாகக்குழியில் தூக்கி எறிந்து விட்டதுபோ லிருந்தது.'' என்று கண்ணீர் விட்டபோது,

ஜெகதீசன் ''அந்தோ பரிதாபம் பரிதாபம்'' என்று துக்கித்தான்.

மீனும்:—ஆ! எனக்காகத் தாங்கள் பரிதாபப்படுவதற்கு நான் உரியவளே. என் தாயார் சங்கதிகளை முதலில் கூறியபோது நான் கேட்டதே திடுக்கிட்டுத் திப்பிரமை யடைந்து விட்டேன். உண்மையாகவே கூறுகிறார்களா அல்லது நமக்கு மனக்கலவரம் நேரிட்டு நாமே யிம்மாதிரி எண்ணிக் கொள்ளுகிறோமா வென்று என் மனதிற்

பெரிய சந்தேகம் உண்டாய்விட்டது. இன்னது நினைப்பதென்றும் இன்னது செய்வதென்றும் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நான் என் மனோவேதனைகளைப் பற்றி யதிகமாய்க்கூறித் தங்களுக்குத் தொந்திரை கொடுப்பது தகாது. இந்த ஏற்பாட்டிற்கு என் மனம் சற்றும் இடங்கொடாததால் நான் பட்டவேதனைக் களவேயில்லை யென்று மட்டும் தாங்கள் பூரணமாய் நம்பலாம். செவ்வாய்க்கிழமையாகிய அன்றுதான் எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டதாகவும் நாங்கள் உடனே புறப்பட்டு வந்து தன்னிடம் தோழிகளாகச் சேர்ந்துவிடலாகுமென்றும் இளவரசியிடமிருந்து என் தாயாருக்குக் கடிதம் வந்தது. இராணியே மூலகாரணமாய் இச்சதியாலோசனையிற் சேர்ந்தவள். உண்மையில் அவள் இளவரசிக்கு இத்தகைய கொடிய தீங்கைச் செய்யச் சதியாலோசனை செய்துகொண்டிருந்தாலும் மேலுக்கு அவளுக்கு மிக்க நட்பினளாயிருப்பதுபோல அபிநயம் செய்துகொண்டிருக்கிறாள். அவர்களுக்குள் கடிதப் போக்குவரத்துமுண்டு. ஆகையால் இராணி எங்களைப்பற்றி மிக்க சுலபமாய் இளவரசிக்குச் சிபாரிசு செய்ய அனுகூலமாயிருந்தது. அத்தகைய மாமியாரின் சிபார்சை யிளவரசி யெப்படி நிராகரிப்பாள்? ஆகையால் உடனே எங்களைத் தன் தோழிகளாக ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தாள். என் தாயார் இளவரசியின் கடிதம் வந்ததினமே அதாவது செவ்வாய்க்கிழமை மாலை இளவரசனைப் போய்க் கண்டாள்.

இளவரசி யிப்போது தேக சுகத்திற்காகப் பாஞ்சால நாட்டிற்குச் சென்றிருக்கும் சங்கதி நீர் அறிந்ததே. என் தாயார் இளவரசனிடம் கலந்து பேசிவிட்டு வந்தவுடனே,

நாங்கள் பாஞ்சாலநாட்டின் இராஜதானியாகிய பரிதிபுரம் போக மறுநாட்காலையே கப்பலேறும் துறைமுக நகருக்குச் செல்லவேண்டுமென்று கூறினர்கள்.

அவ்வாறே நேற்று பிரயாணத்திற்கு யாவும் ஆயத்தம் செய்யப்பட்டதும் துறைமுக நகருக்குப் புறப்பட்டோம். கப்பல் ஏறும் சமயம் நெருங்க நெருங்க என்மனம் தாளவில்லை. ஆகவே அவசரத்தோடு என் தாயார்க்கு ஒருகடிதம் எழுதினேன். அதில் எங்களுக்குக் குறிக்கப்பட்ட வேலையைச் செய்ய என்மனம் ஒப்பவில்லையென்றும், ஆகையால் நான் மிக்க மனவருத்தத்தோடு குடும்பத்தை விட்டு விலகி விடுவதாகவும், இவர்களெல்லாம் மனந்திரும்பி அத்தகைய கொடிய பாபச்செயலினின்றும் விலகி விடவேண்டுமாய் நான் கடவுளைப் பிரார்த்திப்பதாகவும் எழுதினேன்; அதோடு நான் இவர்களைக் காட்டிக்கொடுப்பதில்லையென்றும் வாக்குத் தத்தம் செய்திருக்கிறேன். அக்கடிதத்தை யெழுதி துறைமுக நகரில் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் என் அறையிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டு, கப்பல் புறப்படச் சுமார் ஒருமணி நேரமிருக்கும்போது நான் அவ்வூரை விட்டு ஓடி வந்துவிட்டேன்.

இப்பிரதேசம் எனக்குப் புதுவிடமானதால் எந்தத் திக்காய் எந்த விடத்திற்குச் செல்வதென்று தெரியாமல் பித்தம் பிடித்வள்போல் அலைந்து திரிந்தேன். ஒவ்வொரு வேளையில் எங்காவது மாத்தடியில் மறை விடத்தில் உட்கார்ந்து, அச்சமயம் என் துயரம் சற்று தணிந்து மனது கொஞ்சம் தேறுதலடையு மட்டும் கண்ணீர்விட் டழுவேன்..........” என்று கூறும்போது, ஜெகதீசன் மனந்தாளாமல் “அய்யோ தெய்வமே! நீ எத்தகைய துயரந்தான் அச்சமயம் அனுபவித்திருக்க வேண்டும். அடடா! இது சண்டாள உலகம்.

ஆனால், உன்வரையில் அத்தகைய சந்தர்ப்பத்தில் நீ குடும்பத்தை விட்டு விலகிவிடுவதை யன்றி வேறுவழியில்லை'' என்றான்.

மீனம்:— ஆம் நானும் சிந்தித்துச் சிந்தித்துக் கடைசியில் அதே தீர்மானத்திற்கு வந்தேன். நிராதாவாய் நாம் அலைந்து திரிந்து எங்குச்செல்வது? நமது கெதியென்னாகும்? என்று சிந்தித்தபோது பெருந் திகிலாகவேயிருந்தாலும், இத்தகை மாபாதகத் தொழிலுக்கு உடன்படுவதை விட நமது கெதியென்னவானாலும் சரியென்று துணிவடைந்து விட்டேன். சுருக்கமாய்க் கூறிவிடுகிறேன். மேற்கண்டவாறு கலவரத்தோடும் திகிலோடும் பல மணிகள் நேரம் அலைந்து திரிந்து கடைசியில் இந்த இரத்தினபுரி நகரத்தின் ஓரத்தில் வந்து சேர்ந்தேன்.

எனக்கு எல்லாம் புதுவிடம். எனக்கு வேண்டியதெல்லாம்கூடி இரவு தங்க ஒரு மரியாதையானவிடம் வேண்டியதென்பதே. அதைப்பற்றி விசாரிக்கத்தொடங்கிய போது, ஒவ்வொருவரும் என்னைக்கண்டு நகைப்பதும், கேலிசெய்வதும், தகாத வார்த்தைகளைக் கூறத் தொடங்குவதுமானார்கள்.

என் மனதிற்கு மிக்க வியாகூலமாய் விட்டது. அப்புறம் எவரைக் கண்டாலும் பேசத் திகிலாய்விட்டது. கடைசியில் நடந்து அலைந்து அதற்குமேலும் சகிக்க முடியாமல் என் பிராணன் போய்விடும்போ லாய்விட்டது. ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாமல் ஒரு வீட்டின் வாயிலில் அயர்ந்து உட்கார்ந்து விட்டேன்.

அங்குச் சற்றுநேரம் இருந்தபோது, ஒருவாலிப ஸ்திரீ என்னைக்கண்டு இரக்கத்தோடு விசாரித்தாள். அவள் மிக்க

நாணயமானவளாகவும் மரியாதையான குடும்பத்திலிருப்பவளாகவுமே தோன்றினாள். அவள் என்னைத் தன் வீட்டிற்கே அழைத்துக்கொண்டு போவதாய்க் கூறவே நான் மிக்க சந்தோஷத்தோடு அவள் கூடச் சென்றேன்.

ஆனால் தன்வீடென்று அவள் கூறிய வீட்டின் ஒரு அறையில் என் ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்ளத் தலை வைத்துச் சயனித்த சற்றுநேரத்திற்குள் ஒருமனிதன் இரகசியமாகவும் கள்ளத்தனமாகவும் என் அறைக்குள் வந்து "சந்தடி செய்யாதே. என்னைச் சிநேகனாக நம்பு நீ கொடிய கொலைபாதகராகிய கள்ளக்கூட்டத்தாரிடம் சிக்கிக்கொண்டாய். நீ யுடனே இதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போகா விட்டால் உனக்குப் பிராணாபத்தே நேரிடும்" என்று கூறி, அந்த அறையின் சாளரத்தைத் திறந்து அதன் வழியாய் என்னை யிறங்கிப் போகும் படிச்செய்ய நான் வீதியில் இறங்கியதும் ஓட்டமாயோடத் தொடங்கினேன். எனக்கு உதவி செய்த மனிதன் இனியங்கிருப்பது தனக்கு ஆபத்தாய் முடியுமென்று அதே வழியாய் ஓடிவந்துவிட முயன்றான். ஆனால் பாபம் அக்கள்ளர்கள் அதற்குள் சங்கதி யறிந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

என்னையும் சிலர் துரத்திக்கொண்டு வந்தார்கள். நானும் சிக்கிக்கொண்டே யிருப்பேன், ஆனால் நற்காலமாய் நான் ஓடும்போது விடியற்காலமாய் விட்டதால் தொழிற்சாலைக்குச் செல்லும் சிலஆட்கள் என் எதிரில் வர அவர்களிடம் நான் அடைக்கலம் புகுந்தேன். அவர்கள் என்னை யழைத்துப்போய் ஒரு மரியாதையான விடத்தில் விட்டார்கள்.

அங்குத் தங்கி இளைப்பாறி யெழுந்ததும் நாம் எங்குச் செல்லலாம்? யாருடைய உதவியைக் கோரலாம்? என்று சிந்தித்தேன். சுகசிங்கம் பிரபுவின் உதவியைக் கோரலாமா

வென்று நினைத்தேன். அம்மனிதன் இச்சதியாலோசனை யில் எவ்வளவு ஆழ்ந்து கலந்திருக்கிறானென்பதும், அதற் காக என் சகோதரிகளையும், என்னையும் நன்னெறியிலிருந்து விலகச்செய்ய எவ்வளவு ஏற்பாடுகள் செய்திருக்கிறானென் பதையும், இவனுடைய இரக்கமில்லாத அக்கிரமமான நடக் கைகளையும் நினைத்துக்கொண்டதே அத்தகைய பாதகன் முகத்தில் விழிக்கவும் எனக்கு மனம் வரவில்லை. பின்னை யெங்குச்செல்வது? யார் உதவியைக்கோருவது? எனக் கொன்றும் தோன்றவில்லை. என்கெதி அலைகடற் றுரும்பு போலும் தேனில் விழுந்த ஈபோலும் ஆய்விட்டது. இவ் விதமாய் என்மனம் சொல்லொணா வேதனையில் இருக்கும் சமயம் தாங்கள் என்னைக்கண்டு விசாரித்து ஆதரவான மொழிகளைக் கூறினீர்கள். இப்போது என் சரித்திரம் முழு மையும் உங்களுக்குத் தெரிவித்து விட்டேன்'' என்றாள்.

ஜெகதீசன்:— அம்மா முன்னமே நான் உன்மேல் இரக்கம் கொண்டேன். உன் சரித்திரத்தைக் கேட்டபின் இப் போது உன் நடவடிக்கையை நான் எவ்வளவோ உயர்வானதாய் மெச்சிக்கொள்கிறேன். நீ மிக்க பாப கரமான அக்கிரமச் செய்கைக்கு உடன் படாததா லேயே யித்தகைய துன்பங்களுக்கும் ஆபத்துகளுக் கும் ஆளானாய். நீ யிவ்வாறே யனுபவிக்கும்படி விடப்பட்டால் கருணாநிதியும் நீதிபாருமாகிய கடவுள் ஒருவர் இருக்கிறாரென்று நினைக்கவே யிடமில்லாமற் போய்விடும். நீ முதலாவது என் புத்திமதியைக் கோரி னாய். நான் கேட்டுக்கொள்வதென்னவெனில் முதலா வதாய் என் நட்பை யேற்றுக்கொள்ள வேண்டு மாய்க் கோருகிறேன். நான் ஒரு கன்னிகையை மணம் புரிந்துகொள்ள ஒப்பந்தம் செய்துகொண் டிருக்

றேன். அவள் மிக்க நாணயமும் யோக்கியமுமான வள்; மரியாதையான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் கந்தபுரியிலிருக்கிறாள். நீ யவளோடு வசிப்பதானால் உன் சொந்த வீடுபோல் நம்பலாகும். ஆகையால் அது விஷயத்தில் உன் சம்மதத்தைக் கூறக் கோருகிறேன்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட மீனும்பாள் மிக்க நன்றியறிதலோடு "ஆகா! மிக்க சந்தோஷத்தோடு ஒப்புக்கொள்கிறேன். தாங்களே யெனக்கு உண்மையான சிநேகிதர். தங்களுக்கு மனைவியாகப் போகும் அப் புண்ணியவதியை என் சொந்த சகோதரியைப்போல் நேசிப்பேன். தங்கள் ஏற்பாட்டை மிக்க நன்றியோடும் சந்தோஷத்தோடும் ஒப்புக்கொள்கிறேன். ஏனெனில் நான் என் தாயின் குடும்பத்திற்குச் செல்லமாட்டேன்—தற்சமயமாவது—தங்களைவிட எனக்கு வேறே நண்பர் ஒருவருமில்லை" என்றாள்.

ஜெக:—"நான் இங்குவந்த வேலை முடிந்துவிட்டது. நீ அலைந்துதிரிந்து மிக்க அலுப்படைந்திருக்கிறாய். ஆயினும் சற்று நித்திரைசெய்து: இளைப்பாறியதால், கூடியவரையில் சற்றுச் சுகமடைந்திருக்கலாகும். ஆகையால் பிரயாணம் செய்ய உனக்குத் தகுதியாய்த் தோன்றினால் நாம் உடனே கந்தபுரிக்குப் புறப்படலாம்" என்றான்.

மீனும்:— அந்தோ! இந்த நகரைவிட்டு வெளிதாண்ட நான் மிக்க ஆவலாயிருக்கிறேன். ஏனெனில் என் தாயாரின் சிநேகர்களும் இச்சதியாலோசனையில் சம்பந்தப்பட்டவர்களுமாகிய பலர் இங்குளர். அவர்களில் யாரேனும் ஒருவர் என்னைக் கண்டுவிட்டால் பலவந்தமாய்க்கூட என்னைப் பிடித்துக்கொண்டுபோய் என்

தாயாரிடம் ஒப்பித்து விடுவார்கள். அதன்பின் என் கெதி சொல்லவேண்டியதில்லை.

ஜெக:— "அப்படியானல் நாம் ஒருவினடிகூட ஆலசியம் செய்யவேண்டிய அவசியமேயில்லை. இப்போது ஒரு மணியாகிறது. உடனே ஒரு குதிரைவண்டியிற் புறப் பட்டால் இரவு எட்டு மணிக்குள் கந்தபுரி போய்ச் சேரலாம்'' என்று கூறிவிட்டு, ஹோட்டல் ஆட்களில் ஒருவனையழைத்து "ஆலசியம் செய்யாமல் கந்தபுரிக்கு ஒரு நல்ல குதிரைவண்டி பேசிக்கொண்டுவா'' வென்று கட்டளையிட்டான்.

அவ்வாறே வண்டி பேசிக்கொண்டு வரப்பட்டதும் அரைமணி நேரத்திற்குள் இருவரும் கந்தபுரிக்குப் பிரயாண மானர்கள்.

———

## 31 - வது அத்தியாயம்.

ஜெகதீசனும் மீனும்பாளும் மேற்கண்டபடி சம் பாஷித்துக்கொண்டிருக்கும் அதேவேளையில் காப்டன் கபுர் கிருஷ்டனும் அவன் ஆளாகிய எச்சனும் தாங்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில் போஜனம் அருந்திக் கொண்டிருக்கிருர்கள்.

இப்போது அவர்கள் முன் இருந்த மாதிரியாயில்லை. கிழிந்து மாசுபடிந்த உடைகளெல்லாம்போய் இப்போது பெரிய மனிதர்களைப்போல் நாணயமான உடைகளை யணிந்துகொண் டிருக்கிருர்கள். ஆனல் அவர்கள் சுபாவ நடக்கைகளின் மாறுதல் மட்டும் சற்றும் மாறுதலடைய வில்லை. அதாவது கபுர் கிருஷ்டன் இன்னும் பெருமையும் கௌரவமும் அதிகாரதோரணையுமுடைய ஒரு பெரிய மனி

தன்போல் அபிநயிக்கலானான். எச்சனோ, இன்னும் இரு ளடர்ந்த சிறிய மூலைகளில் அடியோடு உருவே தெரியாமல் பதுங்கிக்கொண்டிருக்க ஆவலுடையவனானான்.

கபூர் கிருஷ்டன் தான் ஒரு பிரபு வமிசத்தில் பிறந்த ஒரு சுத்தவீரனான சேனாதிபதிபோல், தானே இராஜ்ஜியத்தைக் காப்பாற்றியதால் அரசனே தன்னிடம் நன்றியோடு நடந்துகொள்வது போன்ற பெருமை யுடைவன் போலும், உலகமே ஒரு இலட்சிய மில்லாதவன் போலும் நடக்கத் தொடங்கினான்.

நாம் கூறும் சம்பவங்கள் நடக்கும் வியாழக்கிழமை பகல் ஒருமணிக்கு மேற்கண்ட ஆசாமிக ளிருவரும் ஹோட்டலின் மூன்றாவது மாடியிலுள்ள ஒரு அறையில் இருக்கிறார்கள். ஏனெனில் கபூர் கிருஷ்டன் குமாரவேல் பிரபுவிடம் ஒப்பந்தம் செய்து கொண்டபடி எதிரிலுள்ள மதனவல்லியின் வீட்டின்மேல் கண் வைத்துக்கொண்டிருக்க அதுவே தகுதியானவிடம். எச்சன் அவள் வீட்டிற்கு நேராயிருக்கும் சாளரத்திலிருந்து எந்நேரமும் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டே யிருப்பான். அச்சாளரத்தின் பின் விடப்பட்டிருக்கும் திரையின் பின்னிருந்து ஒரு துவாரத்தில் இவன் பார்த்துக்கொண் டிருப்பதால் வெளியிலுள்ளோர் ஒரு மனிதன் அங்கிருந்து பார்ப்பதை யறியமுடியாது. அங்கிருந்து பார்த்தால் மதனவல்லியின் அறையும், அதற்குள் யாராவது வருவதும் யாவும் தெரியும்.

கபூர் கிருஷ்டன் அறையின் மத்தியில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, இன்னவேளையில் இன்ன மனிதன், இன்னின்ன அடையாளங்களை யுடையவன் மதனவல்லி வீட்டிற்கு வந்தானென்றும், அவன் வண்டியில் வந்தான், நடந்து வந்தான், தனியாய் வந்தான் அல்லது இன்

னின்ன அடையாளமுள்ள ஆளோடு வந்தான், இவ்வளவு நேரம் அங்குப் பேசிக்கொண்டிருந்தான், போகும்போது அவன் முகத்தில் இன்னவிதமான குறிகளிருந்தது என்பவை முதலிய விவரங்களை எச்சன் கூறுகிறபடி ஒரு புத்தகத்தில் குறித்துக்கொள்வான்.

அன்று மாலை எச்சன் தன் எஜமானை நோக்கி "இப்போது மதனவல்லி தன்னை மிக்க அக்கரையோடு அலங்காரம் செய்துகொண்டிருக்கிருள். அவள் தோழி யவளுக்கு அலங்காரம் செய்யும்போது மதனவல்லி மிக்க உன்னிப்பாய் நிலைக்கண்ணுடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டே இடையிடையில் தன் அலங்காரத்தில் மாறுதல்களை யுண்டாக்குகிருள்" என்ருன்.

கபூர் கிருஷ்டன்:—"அப்படியாயின் சீக்கிரத்தில் யாரோ முக்கியமான ஆசாமி யவளைக் காண வரப்போகிருன். நீ கூறுகிறதெல்லாம் நான் குறித்துக்கொள்ளுகிறேன். உயர்ந்த அந்தஸ்திலுள்ள சிலர் இவள்மேல் போட்டி போட்டுக்கொண்டிருக்கிருர்கள். திங்கட்கிழமை குமாரவேல் பிரபு எனக்குக் கூறியவாறே செவ்வாய்க்கிழமை ஸர்தார் சூரியநாயகம் உன்னிடம் கூறினன். இருவரும் மதனவல்லி வீட்டில் நடக்கும் விஷயங்களைக் கவனிக்கும்படி நம்மோடு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். பிறகு கடந்த இரவு வரதநாயகிச் சீமாட்டி வீட்டில் நான் அந்த அயோக்கியப் பயலாகிய கர்னல் மாரப்பனைப் பார்த்தபோது--ஆ! அந்தச் சுத்த அயோக்கியப் பயலை யெவ்வாறு வெறுக்கிறேன் தெரியுமா! ஆகா! ஸ்திரீகளில் கடைகெட்ட ஸ்திரீயினும் தாழ்ந்த கோழைப்பயல்!........" என்றபோது, ஹோட்டல்

வேலைக்காரன் சிற்றுண்டி கொண்டு வரவே இருவரும் உட்கார்ந்து அதை யருந்தத் தொடங்கினார்கள்.

இருவரும் ஆகாரங்களை யருந்திக்கொண்டே யிருக்கையில் எச்சன் தன் வேலையை முடித்துக்கொண்டு ஆலசியம் செய்யாமல் சாளரத்தருகில் சென்று நின்று மதனவல்லியின் வீட்டை நோக்கிக்கொண்டிருந்தான். அவன் சற்று நேரம் அவ்வாறே உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டிருந்து, திடீலென்று மிக்க வியப்படைந்தவனாய் ஓடிப்போய்த் தன் எஜமானை நோக்கி,

"இதோ! இதோ! இளவரசனுடைய இரதம் மதனவல்லியின் வீட்டு வாயிலில் வந்து நிற்கிறது" என்றான்.

அவன் கூறியது உண்மையே. அப்போதுதான் இளவரசன் வண்டி மதனவல்லியின் வீட்டெதிரில் நின்றது. உடனே இளவரசன் வண்டியினின்றும் இறங்கி வீட்டிற்குள் நுழைந்து மதனவல்லியிருக்கும் அறைக்குச் சென்றான். அங்கு மஞ்சத்தில் உட்கார்ந்திருந்த மதனவல்லி எழுந்து களிப்போடும் மிக்க மரியாதையோடும் அவனுக்கு நல்வரவுகூறி உபசரித்தாள்.

இளவரசன் முதல் முதலாக மதனவல்லியை யிப்போதுதான் பார்த்தான். அவளுடைய கெம்பீரமான தோற்றத்தையும் எத்தகைய மனதையும் மயக்கிவிடக்கூடிய அவளுடைய அதிசயமான வனப்பையும் கண்டதே பிரமிப்படைந்து பூரணமாய் மயங்கிவிட்டான். அவன் சுகசிங்கம் பிரபுவின் வீட்டில் விருந்துண்டபோது அவள் வனப்பைப் பற்றிக் கேள்விப்பட்டதைவிட இப்போது இலட்சம் பங்கு அதிகமா யிருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

மதனவல்லியோ இதற்கு முன்பு பலமுறைகளில் இளவரசன் இரதத்தில் செல்லும்போது பார்த்திருக்கிறாள்.

அதோடு அவன் குணதியங்களும் நடவடிக்கைகளும் யாவும் அவள் நன்கறிவாள். அப்படியிருந்தும், தான் இப்போதே முதல்தடவையாக இளவரசனைக் கண்டதுபோலும் அவன் வனப்பைக் கண்டு மையல் கொண்டவள்போலவும், ஆனால் அதை வெளிகாட்டாத சாமார்த்தியத்தோடு மறைப்பவள் போலவும் அபிநயம் செய்தாள்.

அவள் இளவரசனுக்கு நல்வரவு கூறிவிட்டு எதிரில் நின்றாள். அரசன் இளவரசன் முதலியவர்கள் முன் அவர்கள் ஆசனத்தி லமர்ந்தபிறகே மற்றையர் உட்காரவேண்டும் என்ற முறைமைப்படி யப்படிச் செய்தாள். ஆனால் இளவரசனோ தந்திரமாய் முகஸ்துதி செய்வதில் பிரக்யாதி பெற்றவன். அவன் மதனவல்லியை நோக்கி, “நீ யுட்காரு முன் நான் உட்காரமாட்டேன்” என்றான். மதனவல்லி யவ்வாறே யுட்கார்ந்தாள்.

இளவரசன் அவளைநோக்கி, “நான் இங்குவந்த காரணம் உன்னைக் காணவேண்டுமென்ற ஆவலேயன்றி வேறொன்றுமில்லை. உண்மையென்னவெனில் உன் வனப்பைப்பற்றி மிக்க அபூர்வமும் ஆச்சரியமுமான வதந்திகளையெல்லாம் நான் கேள்விப்பட்டேன். ஆதலால் இத்தகைய அபூர்வ வனப்பையுடைய மாதுகூட இவ்வுலகி லிருக்கிறாளா? அதிலும் நமது இராஜதானி நகரில் இருப்பது உண்மைதானா வென்பதை யறியும்பொருட்டே வந்தேன். இப்போதோ அவர்கள் கூறியது உண்மையில் நூற்றில் ஒரு பங்குகூட இல்லையென்றே தெரிகிறது” என்றான்.

மதனவல்லி:—“நான் இதுகாறும் தங்களைத் தரிசிக்கும் பேறு பெற்றிலேனெனினும் ஸ்திரீகளைப் புகழ்ந்து முகஸ்துதி செய்வதில் தாங்கள் இணையற்றவர்களென் பதைமட்டும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த

சாமார்த்தியத்தைப் பிரத்தியட்சமாய்க் கண்டுணரும் பாக்கியம் கிடைக்குமென நான் எதிர்பார்க்கவில்லை'' என்றாள்.

இளவரசன் "என் புகழ்ச்சியை நீ யொரு சாமார்த்திய மென்று கூறுவதால் நான் உன்னைப் புகழ்ந்ததற்காக என் மேல் கோபித்துக்கொள்ளவில்லை யென்று நம்புகிறேன். ஒரு தெய்வமாது ஆடவர் தன் உயர்வான வனப்பைப்பற்றிக் கூறும் புகழ்ச்சியாகிய துதிகளை அங்கீகாரம் செய்துகொள்ள வேண்டியதே'' என்றான்.

மதன:—ஸ்திரீகள் எப்போதும் புகழ்ச்சியால் மகிழ்வடையும் அற்பகுணமுடையவர்கள். அப்படிப்பட்டவர்களென்று பெயர் வந்துவிட்டிருக்கிறது. ஆயினும் தாங்கள் இவ்வளவு புகழ்ந்து கூறுவது என்னைத்தான் முதல்தடவையாக விருக்கும் பட்சத்தில் நான் மிக்க மகிழ்ச்சி யடைந்துவிட்டே யிருப்பேன். இராஜ அரண்மனையில் எத்தனையோ சீமாட்டிக ளிருக்கிறார்களென்றும் அவர்களில் ஒவ்வொருவரும் இம்மாதிரியே தங்களால் புகழ்ந்து ஸ்துதிக்கப்பட்ட பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்களென்றும், இன்னும் சிலர் இதற்கும் அதிக பாக்கியமே பெற்றிருக்கிறார்களென்றும் நான் அறிந்திருக்கிறவரையில்......''

இளவரசன்:—"ஆகா! உன் அபூர்வ வனப்பைப்போலவே உன் அறிவும் இருக்கிறது. உன்வரையில் நான் வெளியிட்ட புகழ்ச்சிகள் யாவும் மனப்பூர்வமாய்க் கூறப்பட்டனவேயாகும். ஆம் உண்மையாகவே நான் உன் வனப்பை மிகவும் மெச்சிக்கொள்கிறேன். அதற்குத்துதிசெய்கிறேன். ஊழியம் செய்யச் சித்தமுள்ளவனாயிருக்கிறேன். இதுவரையில் நான் எண்ணிறந்த பேர்

களின் வனப்பைப் புகழ்ந்திருந்தபோதிலும், எல்லார் வனப்பைக் காட்டிலும் உன்வனப்பொன்றே யிணையற்றது. நீ அரண்மனையில் அரசசபையிலிருக்க வேண்டும். எனக்குத் தயவுசெய்து மட்டும் அனுமதியளித்துவிட்டால் அதற்குத்தக்க ஏற்பாடுகளை யான் உடனே செய்ய மிக்க பிரியமுடையவனாயிருக்கிறேன்'' என்றான்.

மதன:—“அடியேன் எவ்வாறு திடீலென்று இவ்வளவு சீக்கிரத்தில் தங்கள் தயவிற்குப் பாத்திரமாய்விட்டேனென்பது எனக்குச் சற்றேனும் விளங்கவேயில்லை-அதிலும்........அனாதை........ஒரு பெருமையுமற்றவள்'' என்றாள்.

ஆனால் அவள் மனதில் மட்டும் இளவரசன் மொழிகளைக் கேட்டதே மிக்க மகிழ்ச்சி யுண்டாயிற்று. அவள் அதை வெளிக்குக் காட்டாவிட்டாலும் திடீலென்று அவள் கண்களில் உண்டாகிய பிரகாசம் அதைத் தெரிவிக்கக் காணலாம்.

இளவரசன் அவளைநோக்கி “நீ அனாதையுமல்ல, ஏழையுமல்ல, கீர்த்தியில்லாதவளுமல்ல. உன்போன்ற அபூர்வ வனப்புடையவர்களுக்கு எல்லாக் கீர்த்திகளும் உண்டு. தற்சமயமில்லாதுபோல் தோன்றினும் ஒரு நொடியில் அடையலாகும்.உனக்குக் கௌரவமான ஒரு பட்டப்பெயர்வேண்டுமாயின் நான் அப்படியே யதுகிடைக்கச் செய்கிறேன்'' என்றான்.

மதன:—தாங்கள் என்னைச் சோதிக்கிறீர்கள். அதாவது என்னுடைய ஆசை யெவ்வளவு தூரம் செல்கிறதென்று பார்க்கிறீர்கள். சாதாரணமாய் ஸ்திரீகளுக்குள்ள செல்வத்தையும் கீர்த்தியையும் விரும்பும் குணம் என்

னிடத்தில் மட்டு மில்லையென்று நான் கூறவல்லே னெனினும், தங்களுக்கு என்னைப்பற்றி வெறுப்புண் டாகும் வண்ணமாய்மட்டும் நடந்துகொள்ளாத புத்தி யெனக்கு ஆண்டவன் இயற்கையிலேயே அளித்திருக் கிறார்.

இளவ:—ஓகோ! நீ நான் கூறியதைத் தவறாய் அர்த்தம் செய்துக்கொண்டாய். நான் கூறிய வனைத்தும் மனப் பூர்வமாய்க் கூறியவைகளே. இது சத்தியம். நீ மட் டும் என்னை மனப்பூர்வமான சினேகனுய்க் கருதுவ தாய்க் கூறினால் என்மனோபாவம் முழுமையும் நான் வெளியிடச் சித்தமா யிருக்கிறேன்.

மதன:—தாங்கள் இனிச் சிம்மாதன மேறப்போகும் மகு டாதிபதி யென்பதையும், நான் தங்களுடைய குடி களில் சாதாரணமான ஒருத்தி யென்பதையும், தங்கள் வார்த்தைகளைக் கட்டளைகள்போல் நான் பக்தியோடும் மரியாதையோடும் எற்றுக் கொள்ளவேண்டிய கடமை யுடையவள் என்பதையும் நான் மறந்தவளல்ல. ஆனால் சாதாரணமாய்ச் சில மாதர்கள்போல் இழிவான குணங்களை யுடையவளாகமட்டும் என்னைக் கருதிவிட வேண்டாமென்று பிரார்த்திக்கிறேன்.

இளவரசன்:— உன்னை நான் சாதாரணமான மற்ற மாதர் களைவிட மிக்க உயர்வான குணங்களை யுடையவளாய்க் கருதியபடியாற்றான் என் மனோபாவத்தைத் தாராள மாய்க்கூற அனுமதியளிக்கும்படி யுன்னைவேண்டிக் கொள்வது. அந்த அனுமதியை மட்டும் நீதயவுசெய்து அளித்துவிட்டால் நான் மிக்க மனோ நிம்மதியோடு பேசுவேன்.

மதன:— தாங்கள் கூறும் எதையும் பக்தியோடு செவி யேற்க நான் ஆயத்தமாயிருக்கிறேன்.

இள:— ஒருசமயம் உனக்கு என் பேச்சுகளால் மனவருத்த முண்டாகுமோ? அல்லது கோப முண்டாகுமோ என்று சற்று அஞ்சுகிறேன்.

மதன:— என் போன்ற மாதரிடம் எவ்வண்ணமாய்ச் சம் பாஷிப்பதென்பது தங்களுக்கு நன்குய்த் தெரிந்திருக் கிற வரையில் தாங்கள் அத்தகைய விஷயத்தைப்பற்றி அச்சங் கொள்ளவேண்டிய காரணமேயில்லை.

இளவரசன் அவள் முகத்தை யுற்றுநோக்கிக்கொண் டே "ஒருசமயம் நான் உன் முன் முழங்காற்படி யிட்டு உன் மேல் நான் பூரணக்காதல் கொண்டிருப்பதாய்க் கூறி னுலோ" என்ருன்.

மதன:— அப்படிக்கூறினுல் தங்கள் கேலியாகிய சம்பா ஷணையை அளவு மீறிக்கொண்டு போவதாய்க் கருது வேன்.

இள:—"ஆனுல் நான் அப்படிக் கேலியாயாவது, சோதிக்க நினைத்தாவது கூருமல், மனப்பூர்வமாகவும் சத்திய மாகவும் உன்மேல் பூரண காதல் கொண்டிருப்பதாக வும், உன் அடிமையாய்விடச் சித்தமாயிருப்பதாகவும் கூறினுல் அப்போது நான் உன்னிடமிருந்து எத்தகைய விடையை யெதிர்பார்க்கலாகும்?" என்று கூறிவிட்டு மிக்க கலவரத்தோடும் ஆவலோடும் அவள் வாயினின் றும் என்ன மறுமொழி வருமோவென்று நோக்கிக் கொண்டிருந்தான்.

மதனவல்லி இம்மொழிகளைக் கேட்டதும் தன் மனதி லுண்டான உணர்ச்சிகளையும் நெஞ்சு துடிப்பையும் சங்

தோஷத்தையும் மிக்க சாமர்த்தியத்தோடும் கஷ்டத்தோடும் அடக்கிக்கொண்டு மிக்க நாணத்தோடு இளவாசனை நோக்கி "தாங்கள் திடீலென்று கேட்கும் இத்தகைய கேள்விகளுக்கு என்ன விடையளிப்பதென்று எனக்குச் சற்றேனும் விளங்கவில்லை" என்றாள்.

இள:— "ஓ! மதனவல்லி!" என்று கூறிக்கொண்டே தன் நாற்காலியைச் சற்று அவளருகில் இழுத்துக்கொண்டு, "நீ யென் விஷயத்தில் கடின நெஞ்சுடையவளாயிருப்பாயென்று நான் நம்பவில்லை. நான் சாதாரணமான மனிதர்களில் ஒருவனாயிருக்கும் பட்சத்தில் இவ்வளவு சீக்கிரமாய், இத்தகைய மிக்க சொற்பகாலப் பழக்கத்திற்குள் என் காதலை வெளியிடத் துணியமாட்டேன். நமது தேசாசாரப்படி சில வாரங்கள் பழகிய பின்பே இத்தகைய விஷயத்தை வெளியிடவேண்டும். ஆனால் அவ்வாறு நடந்துகொள்ள எனக்குப் போதுமான அவகாசமில்லை யென்பது நீ யறிந்தவிஷயமே யென்று நம்புகிறேன். ஆகையால் உன் காதல் இதற்கு முன்பே எந்த வாலிபனுக்கேனும் அளிக்கப்பட்டிருக்கிறதோ? இது விஷயத்தில் என்னிலும் புண்ணியசாலி எவனாவது உளனோ? தயை புரிந்து உண்மையைக்கூறு" என்று மிக்க அன்போடு வினவினான்.

மதனவல்லி முன்போல் மிக்க நாணத்தோடேயே குனிந்தபடி பூமியைப்பார்த்தபடி "அனேகர் என்னை மணம் புரிய விரும்பினார்கள்" என்றாள்.

இள:— ஆ! மதனவல்லி! அனேகர் உன்னை மணம்புரிய விரும்பினார்களா? ஆனால் அவர்களில் யாரையேனும் நீ மணம்செய்ய ஒப்புக்கொண்டதாய்க் கூறவில்லையே. அப்படியாயின் உன் காதலை யெனக்களிப்பாயென்று

நான் நம்பலாகுமா? தயைசெய்து கூறு. நான் மிக்க ஆவலோடு உன் அனுகூலமான விடையை யெதிர் பார்க்கிறேன்.

மதனவல்லி "நான் இதுகாறும் ஒருவர் மேலும் காதல் கொண்டதில்லை" யென்றாள்.

இளவரசன் தன் நாற்காலியை இன்னும் அவளருகில் இழுத்துக்கொண்டு, அவள் கரத்தைப் பற்றிக்கொண்டான். அவள் தன் கரத்தைப் பேசாமல் தன் வசத்தில் விட்டு விடவே மிக்க தைரியமும் நம்பிக்கையுமடைந்து,

"ஆ! மதனவல்லி! உன் அரியகாதலை யெனக்களிப் பாயா? அவ்வளவு பாக்கியத்தைப் பெறலாமென்று நான் நம் பலாகுமா? ஓ மதனவல்லி உனக்கு எல்லா விவகாரங்களும் தெரியும். நீ மிக்க விசாலமான அறிவுடையவள். ஆகை யால் நான் உன்னை மணம்புரிந்து கொள்ள முடியாதென்று உணர்வாய். ஆனால் என் அபிமான ஸ்திரீயாயிருக்கும் பதவி நாட்டிலுள்ள முதல் தாமான ஒரு பெரிய பிரபுவின் மனைவியின் பதவியைவிட எவ்வளவோ உயர்வானதென்று நான் கூறவேண்டியதில்லை. உன்னை யொருபோதும் நான் கைவிட மாட்டேன். என் காதலுக்குரிய ஸ்திரீயை நான் எவ்வளவு மேன்மையான நிலைமையில் வைத்திருப்பேன் என் பதைப்பற்றி நான் கூறவேண்டியது அனாவசியம்" என்று இத்தகைய மொழிகளால் ஸ்திரீகளை மயக்குவதில் தனக்குத் தெரிந்த நயவஞ்சகம் பொருந்திய முகஸ்துதி வார்த்தைகளை யும் ஆசையையும் காட்டி மயக்கினான்.

மதனவல்லி அவன் மொழிகளைக்கேட்டு மனதில் பல விதமான யோசனைகளை யுடையவளாய்ச் சற்று பிரமிப் படைந்தவள் போல் மௌனமாயிருந்தாள்.

இளவரசன் மிக்க ஆத்திரத்தோடு அவள் உட்கார்ந் திருந்த சோபாவிலேயே அவளருகில் உட்கார்ந்து ஆசை மொழிகளால், தனக்கு விடையளிக்கும்படி வேண்டினன்.

நேயர்களே இதன் பின் நடந்த அவர்களுடைய சம்பா ஷணைகளை விவரமாய் இங்குக்கூறுவது தகுதியல்ல வாதலால் கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாய் வேண்டிய விஷயங் களை மட்டும் சுருக்கமாய்க் கூறுகிறேம். மதனவல்லி கடை சியில் இளவரசன் காதலுக்கு இசைந்தவளாகி, அவனை நோக்கி "ஒரு விஷயம் தங்களுக்கு நான் கூறவேண்டியது அவசியமாயிருக்கிறது. அதாவது இப்போது முதல் தரம் நான் தங்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தங்கள் காத லுக்கு இணங்கிவிட்டால் தங்கள் என்னைப்பற்றி தாழ்ந்த அபிப்பிராயம் கொள்ளவேண்டியது சுபாவமே. ஆகையால் நான் என்னைப்பற்றிக் கொஞ்சம் விவரம் தங்களுக்குக் கூற வேண்டும். முதலாவது இதுகாறும் எனக்குக் காதலென் பதே யின்னதென்று தெரியாததால் தங்களைக்கண்டதே என்னையுமறியாது என்மனம் காதலுற்றுவிட்டது. அதோடு என்னுடைய தற்காலநிலைமை நாதனில்லாத அனுதாவான நிலைமையாயிருப்பதால் நெடுநாள் நான் இந்நிலைமையிலே யே யிருக்கமுடியாது. நான் மணமுடித்துக் கொள்ள வெண்ணியிருந்தால் முன்னமே செய்துகொண் டிருப்பேன். தாங்கள் கூறியபடி நான் உயர்ந்த அந்தஸ்திலும், போகங் களிலும், செல்வாக்கிலும் ஆசையுடையவளாதலால், ஒரு பெரிய பிரபுவின் மனைவியாயிருப்பதை விடப் பின்னல் சிம் மாதனமேறப் போகும் ஒரு இளவரசனது அபிமான ஸ்திரீ யாயிருப்பதே கௌரவபதவி யென்று கருதியிருக்கிறேன். இதுவே நான் இவ்வாறு தங்கள் காதலுக்கு இணங்கிவிட்ட தன் காரணம். மற்றபடி நான் இதுவரையில் இந்தவினடி

வரையிலும் காதலென்பதையே யின்னதென்றுணராக் கற்புடைய கன்னிகையே யென்று கடவுளறியக் கூறுகிறேன்.

இனி நான் உம்பிரியப்படியே பூரணமாய்ச் சம்மதித்து விடுமுன் மனம் விட்டு என் உள்ளத்திலுள்ள கோரிக்கைகளைக் கூறிவிடவேண்டும். அவையென்னவெனில், நான் நிறைந்த செல்வம் பொருந்திய நிலைமையிலிருக்க வேண்டும்; எனக்குக் கௌரவம் பொருந்திய பட்டமிருக்கவேண்டும்; அந்த அந்தஸ்துக்குத் தக்க மாளிகை வண்டி ஆடையாபரணங்கள், ஆட்கள் தோழிகள் யாவும் வேண்டும். சுருக்கமாய்க் கூறும்பட்சத்தில் தாங்கள் முன்பு இரகசியமாய் மணம் செய்து கொண்டதாக வதந்தி யுண்டான அச்சீமாட்டி முன்பு எந்த நிலைமையிலிருந்தாளோ அந்த நிலைமையில் நான் இருக்கவேண்டும். அவ்வாறே தாங்கள் செய்வதாய் எனக்கு வாக்களித்தால் நான் சத்தியமும் நம்பிக்கையும் அன்புமுடைய மனைவியிலும் அதிகமாகவே யிருப்பேன். அப்படி வாக்களிக்காவிடில் இந்த விநாடியே நமது அறிமுகம் முடிவிற்கு வரவேண்டியதே'' என்றாள்.

அவள் மேற்கண்ட விஷயங்களைக் கூறிக்கொண்டே வருகையில் இளவரசனுக்குத் தனக்குள் அவைகளைப்பற்றிச் சிந்திக்கப் போதுமான அவகாசமிருந்தது. அவள் கூறி முடித்ததும் அவன் அவளை நோக்கி மிக்க அன்போடு "ஓ! என் உயிரினும் சிறந்த மதனவல்லியே. நீ யிப்போது கூறியவை மட்டுமல்ல. இன்னும் அதிகமாகச் செய்யவே உன் விஷயத்தில் எனக்குப்பிரியம். ஆனால் நீயென் விஷயத்தைத் தயவுசெய்து சிந்திக்கவேண்டும். அதாவது நான் முன்னிருந்த அதே நிலைமையில் இப்போதில்லை. அந்நிலைமை மாறியிருக்கிறது. அப்போதெனக்குக் கலியாணமேயில்லை; ஆதலால் அத்தகைய விஷயங்களால் எனக்குக் கெடுதியேற்பட

வில்லை. நீ கூறிய சிமாட்டி பகிரங்கமாகவே என் அரண் மனையிலேயே வசித்து வந்தாள். அவளை நான் இரகசிய மாய் மணம் புரிந்திருந்தேன் என்ற பிரஸ்தாபம் வெளிவந்த போதிலும் அப்போது நான் மணமின்றி யிருந்ததால் அது என்னைப் பாதிக்கவில்லை. இப்போதோ அப்படியல்ல. சட் டப்படி மணம் புரியப்பட்ட மனைவி யொருத்தியிருக்கிருள். அவளோடு நான் ஒருமித்து வாழாவிடினும், பெயருக்காவது மனைவியென்று ஒருத்தி யிருக்கிருள்.

இப்போது நான் பகிரங்கமாய் முன்போல் உன்னை என் அரண்மனையில் வைத்துக்கொள்ளலாகாது. உண்மை யில் அவள்மேல் எனக்கு எள்ளளவேனும் அன்பில்லை. அவள் எக்கெதியானுலும் எனக்கு அக்கரையேயில்லை. அப் படியிருந்தும் இப்போது நான் முன்போல் நடந்துகொள் வேனேயாகில் அது மிக்க தீமைக்கு இடமுண்டாக்கிவிடு மென்பது உண்மை. ஏனெனில் இந்நகர ஜனங்கள் அத் தகைய கௌரவங்களில் மிக்க நோக்கமுடையவர்கள். முன் னமே நான் இளவரசியை யலட்சியமாய் நடத்துகிறே னென்று வதந்தி யுண்டாயிருக்கிறது. நான் அவளை யெவ் வளவு அலட்சியமாக நடத்தினபோதிலும், பகிரங்கமாய் அவள் இருக்கும்போதே இன்னெரு மாதை நான் அபிமான ஸ்திரீயாக வைத்துக்கொண்டிருப்பதாய் வெளிவந்தால் இச் சனங்கள் சும்மாயிருக்கமாட்டார்கள்; அதனுல் பெருங் கல கத்திற்கு இடமுண்டாய்விடும். கடைசியில் அதனுல் நான் சிம்மாசன மேறுவதற்கே யிடையூருய் முடியும்.

இவ்வளவிற்கும் நீ பேருக்காவது ஒரு புருடனை மணம் புரிந்துகொண் டிருந்தால் அது வேறு மாதிரி. எப்படி யெனில், அவனை நான் என் குடும்பவிஷயங்களுக்குத் தலை மைக் கார்ரியஸ்தனுக வைத்துக்கொண்டால் அவன் உத்தி

யோகத்திற்குத் தக்க உரிமைப்படி என் அரண்மனையி லேயே அவனுக்கென்று விடப்பட்டிருக்கும் பாகத்தில் அவன் வசிக்கவேண்டியவனாகிறான். அவன் பெண்சாதி யாகையால் நீயும் அவனோடு வசிப்பது இயற்கையாகையால் ஒருவரும் உன்னைப்பற்றி குறைகூறவிடமில்லை. ஆனால் நீ கலியாண மில்லாமலிருக்கிறாயே......"

மதன:—நான் மணம் புரிந்துகொண்டால் தங்களுக்கு என் மேல் இப்போதிருக்கும் அன்பு குறையாமலிருக்குமா?

இளவ:—ஒருகாலும் குறையாது. ஒருபோதும் அப்படி நேரிடாது.

மதன:—அப்படியாயின் நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று கோருகிறீர்களோ?

இளவ:—ஆம். ஆனால் அவன் நமது நட்பைப்பற்றிக் கவ னிக்காதவனா யிருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆளைத் தேடுவது சுலபத்திலாகாத காரியம். ஒருநாள் இரண்டு நாட்களில் அத்தகைய புருடனை நீ கண்டுபிடிப்பது கஷ்டம்.

மதன:—நான் ஒருவாரத்திற்குள் மணம் செய்துகொள் கிறேன். அதுவும் தாங்கள் கூறுகிற அதேமாதிரியான புருஷனை.

இளவரசன் மிக்க சந்தோஷமும் வியப்புமடைந்து "ஓ! மதனவல்லி! அப்படியானால் நீ யாவற்றிற்கும் முன் யோசனையோடு ஆயத்தம் செய்துவைத்துக்கொண் டிருக் கிறாய். நீ உண்மையாகவேயிம்மாதிரிகூறுகிறாயா?" என்றான்.

மதன:—"உண்மையாகவே கூறுகிறேன். ஆனால் தாங்கள் மட்டும் நான் கூறிய நிபந்தனைகளையெல்லாம் நிறை

வேற்றவேண்டும். அப்படிமட்டும் வாக்களிக்கும் பட்சத்தில் இந்த ஏற்பாடு எனக்கு மிக்க சந்தோஷமே. ஏனெனில் இந்த ஏற்பாட்டால் எனக்குக் கெட்ட கீர்த்தியுண்டாக வழியில்லை. பிற்காலத்தில் என் சுற்றத்தார் என்னைப்பற்றிக் கேள்விப்பட்டாலும் எனக்கு அவர்கள் முகத்தில் விழிக்க நாணமாவது அச்சமாவது இல்லை" என்று கூறிவிட்டு அதற்குள் தன்னாலடக்க முடியாது உண்டான துயரத்தைச் சமாளித்துக் கண்களில் வந்த நீரைத் துடைத்துக்கொண்டு, "அதெல்லாம் கிடக்கட்டும்; தாங்கள் நான் கோரிக்கொண்ட நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றுவதாய் வாக்களிக்கிறீர்களா?" என்று மனவுறுதியோடு கேட்டாள்.

இளவரசன் "மற்றெந்த ஏற்பாட்டைவிடவும் இப்போது நீ கூறியவைகளையே நான் உசிதமானவைகளாய்க் கருதுகிறேன். அதிலும் நீ முக்கியமாய் ஒரு பிரபு பட்டம் வேண்டுமென்றவரையில், ஆடவனாயிருந்தால் நான் எந்த சாக்கிலாவது அவனுக்கு ஒரு பட்ட மளித்துவிடுவேன். உனக்களிக்கும் பட்சத்தில் உடனே சங்கதி வெளியாய் விடும்; ஆகையால் நீ கூறிய யேற்பாடுகளனைத்தையும் நான் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்கிறேன். நீ யெப்போது என் சொந்தமாவாய்; அதற்கும் நீ ஏற்பாடு செய்திருக்கிற கலியாணச்சடங்கு நடந்தேறவேண்டுமோ? அல்லது நாளைக்கு அல்லது மறுநாள்......"

மதன:—நாளை மாலை நாம் இருவரும் சந்திப்போம். ஆனால் இங்கு உதவாது. என் கலியாண ஏற்பாடே என் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக. ஆகையால் கலியாணத்திற்கு முன்பே என் கௌரவம் அழிந்துவிடலாகாது.

இளவ:—அப்படியானால் நீ எங்கு ஏற்பாடு செய்கிறாயோ செய்.

மதன:—நான் என் வண்டியில் வரலாகாது.

இளவ:—நீ எங்கு கூறுகிறாயோ அங்குக் குறித்தவேளைக்கு என் வண்டிவந்து ஆயத்தமா யிருக்கச்செய்கிறேன்.

மதன:—நகர உத்தியானவனத்தின் வடக்கு மூலையில் நாளை இரவு ஒன்பதுமணிக்கு நான் நெடுக முக்காடிட்டுக் கொண்டு வந்திருப்பேன்.

இளவ:—"சரி என் வண்டி அந்தவேளைக்கு முன்னாடியே யங்கு வந்திருக்கும். அங்கிருந்து நேராய் என் அரண் மனைக்குப் பின்பக்க இரகசியவழியாய் அழைத்து வரும்படி ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

மதனவல்லி யவ்வாறே யொப்புக்கொண்டதும். காதல ரிருவரும் ஆலிங்கனம் செய்துகொண்டு மறுநிமிடம் பிரிந்து விட்டார்கள்.

---

## 32 - வது அத்தியாயம்.

இளவரசன் மதனவல்லியின் வீட்டிலிருந்து புறப் பட்டபின் நெடுந்தூரம் செல்லும் வரையில் தான் சுகசிங்கம் பிரபுவோடு செய்துகொண்ட ஒப்பந்தம் அவன் நினைவிற்கு வரவேயில்லை. ஆனால் அவன் மதனவல்லியின் மனைக்கு வரும்போதுமட்டும் அந்த நுட்பமும் அதிசயமு மான ஒப்பந்தத்தை நினைத்துக்கொண்டேதான் வந்தான். அதுமட்டுமல்ல. அதன்படியே நடந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணத்தோடுமே வந்தான்.

ஆனல் இளவாசன் அவள் வீட்டிற்குள் நுழைந்து அவள் முகத்தைத் தரிசித்த நிமிடமே அவன் மனம் அவள் வனப்பினுல் பூரணப்பிரமையும் மயக்கமும் கொண்டது. அந்த வினடியே அவன் மனதிலிருந்த மற்ற எல்லா நினைவுகளும் ஆதவனைக்கண்ட இமம்போல் பறந்தொழிந்தன. அவன் மனம் அடியோடு மதனவல்லியின் வனப்பென்னும் வலையில் சிக்கிக்கொண்டது. பிறகு அவளிடம் சம்பாஷிக்கத் தொடங்கியதும் அவள் தன்மேல் விருப்பங்கொண்டிருக்கிருளென்று அவன் மனதிற்குக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புலப்படப் புலப்பட அவன் இந்திரியங்களும் கரணங்களும் அந்த மாயவலையில் பூரணமாய்ச் சிக்கிக்கொண்டன. மதனவல்லியே அவனுக்கு முழு உலகமாய்த் தோன்றியது. ஆகையால் வேறு எந்த நினைப்பும் அவன் மனதில் தங்கியிருக்க இடமில்லாமற் போயிற்று. ஆகவே சுகசிங்கம் பிரபுவிடம் செய்துகொண்ட ஒப்பந்தம் அடியோடு மறந்துபோயிற்று.

அவன் வரும்போது, முதலில் மதனவல்லியிடம் மிக்க தந்திரமாய்ப் பேசி ஆசையூட்டி, அவள் தன் கருத்திற்கு இசையச்செய்து பிறகு தந்திரமாய்த் தனக்குப் பதில் சுகசிங்கம் பிரபுவை அவள் ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்ற முழு எண்ணத்தோடேயே வந்தான். அவன் அப்பிரபுவிடம் அவ்வாறு ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது அவன் மனம் முழுமையும் நாம் முன்பு கூறிய அந்த அதிசயமான மாதின்மேல் இருந்தது. அவன் அவள் காதலில் முழுகிவிட்டிருந்தான். ஆனல் மதனவல்லியைக் கண்டதுமுதல் அக்காதல் அவன் மனதினின்றும் கழுவிவிட்டது. சீக்கிரத்தில் அம்மனம் இப்புதுக்காதலில் முழுகிவிட்டது. ஆகவே யவன் தன் அந்தரங்க நண்பனுகிய சுகசிங்கம் பிரபுவிற்காக மதனவல்லியிடம் வந்து சம்பாஷித்து

அவளை யுடன்படச் செய்யவெண்ணியதை மறந்து தனக் காகவே யாவும் செய்துகொண்டு தன் காதலுக்கே யவளை யுரியவளாக ஆக்கிக்கொண்டு தன் மாளிகைக்கு வரும்படி யாகவும் ஏற்பாடு செய்துகொண்டான்.

நேயர்கள் இங்குச் சற்றுச் சிந்திக்கவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. நாவல்களைக் காலப்போக்கிற்காகவும், மனக் கலவரம், சஞ்சலம், ஆயாசம் நீங்கும் பொருட்டாகவும் தான் வாசிக்கிறோமென்றே பெரும்பாலோர் கருதியிருக்க லாகும். அவ்வாறு கருதுவோர் நாவல்களை வாசிப்பதால் அடையத்தக்க பூரண பலன்களை யடையமாட்டார்கள். மேல்கூறிய விஷயங்களே யன்றி நாவல்களை வாசிப்பதால் பல நீதிகளைத் திருஷ்டாந்தத்தோடும் அனுபவத்தோடும் அறியலாம். சற்று அறிவைக்கொண்டு சிந்தித்தால் இன் னும் பல அரிய விஷயங்களையும் புத்திமதிகளையும் அறிந்து கொள்ளலாம்.

இச்சந்தர்ப்பத்தில் காதல் என்ற விஷயத்தைப்பற்றி சற்றுக் கவனித்துப் பாருங்கள். உலக இன்பங்கள் எல்லா வற்றிலும் அதுவே கிரேஷ்டமான இன்பமென்று யாவரும் கருதுகிறார்கள். மானிடர்க்கு உலகபோகங்களிலுள்ள வாஞ் சையில் அந்த ஒன்றின்மேலுள்ள வாஞ்சைக்கு இணை யொன்றுமில்லை. அதன் பொருட்டாய்த் தான் அருமை யாய்க் கருதும் வேறெதையும் தத்தம் செய்து விடுகிறான். அதற்காக உயிரையே இழந்துவிட்ட மூடர்கள் எத்தனையோ பேர் இவ்வளவிற்கும் நூல்களில் அந்த அற்ப சுகத்தை யிச்சிப்பதால் நேரிடும் கஷ்டங்களும் நீடித்த துன்பங் களும் எவ்வளவோ விருக்கின்றனவென்று விரிவாய்க் கூறப் பட்டிருக்கிறது. அதுவே என்றும் அழியாத பேரின்பத்தை யடைவதற்குப் பெருந்தடையாயிருக்கின்றதெனவும் கூறப்

பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் அதிலேயே பெரிய இன்பம் உளதென்று நாம் கருதி யழிகின்றோம். அத்தகைய காதல் எவ்வாறாயினுமென்றும் உண்மையில் இன்பம் அதிலிருந்தா அநுபவிக்கப் படுகின்றதென்று இளவாசன் விஷயத்தாலும் சிந்தித்துப்பார்க்கலாம்.

இளவாசன் முன்பு அந்த அபூர்வமான மாதைக் கண்டதும் அவள் மேல் கொண்டகாதலால், அவள் தன்னை வழிமடக்கித் தூாக்கிருதமாய்ப் பிடித்துவரச் செய்ததைப்பற்றிக் கூட மனஸ்தாபமடையாமல் அவள் கோரிக்கையின்படி அவள் காட்டிய ஒரு பத்திரத்தில் கையொப்பம் வைத்து விட்ட சங்கதி நேயர்கள் மறந்திருக்க மாட்டீர்களென்றே நம்புகிறோம். அவள் அது ஒருவரை மன்னித்து விட்டதாக ஒப்புக்கொள்ளும் உத்திரவு என்று கூறினாளாயினும் அதில் இன்னது எழுதப்பட்டிருக்கிற தென்பதைப் பாராமலே, இனி என்ன எழுதப்படும் என்பதையும் உணராமலே இளவாசன் அதில் கையொப்பம் வைத்தானெனில் அவன் அம்மாதின் மேல் கொண்டகாதல் எத்தகைய தென்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கலாம்.

நேயர்களே! அத்தகைய காதல் கொண்டிருந்த அம்மாதைத் தான் அடையவேண்டியதற் காகவே மதனவல்லியைத் தான் அடையும் பாத்தியத்தை சுகசிங்கம் பிரபுவிற்கு அளித்து விடுவதாக ஒப்பந்தம் செய்துகொண்டான். அந்தோ கடைசியில் அவன் அவள்மேல் கொண்டகாதலும் தன் அந்தரங்க நண்பனுக்கு அளித்த வாக்குத்தத்தமும் எவ்வாறு பறந்துபோயின? இவன் முதலில் அடங்காக் காதல்கொண்ட அவ்வதிசய மாதிடம் சுகம் இருப்பது உண்மையாயின், அது இன்னொரு மாதைக்கண்ட நிமிடமே யடியோடு மறந்துபோய்விடுமோ? இல்லை. மனித சுபாவத்

தின் படி இக்காதலும் மாறிவிடுகிறதேயன்றி இது நிலையான சுகமல்லவென்பதை யித்திருட்டாந்தத்தால் நன்குணரலாகும். அதோடு இக்காதலையுடைய குணத்தால் இந்த இளவரசன் அடையும் அகௌரவமும், கெட்ட பெயரும் யாவரும் கவனிக்கத்தக்கது.

மேற்கண்டவாறு இளவரசன் தன் நண்பனாகிய சுகசிங்கம் பிரபுவிற் களித்த வாக்குத்தத்தத்தை யடியோடு மறந்து, மறுநாள் இரவு தான் மதனவல்லியைச் சந்திக்கப் போகும் சந்தோஷத்தில் அமிழ்ந்த மனமுடையவனாய் அவன் வீட்டிலிருந்து சென்றுகொண்டே யிருக்கையில் வண்டி சுகசிங்கம் பிரபு வசிக்கும் வீதியின் அருகிற் சென்றது.

இளவரசனுக்கு அப்போது தான் திடீலென்று சுகசிங்கம் பிரபுவின் நினைப்பும் மறுவிநாடி யவருக்குத் தான் கொடுத்த வாக்குத் தத்தத்தின் நினைப்பும் உதித்தன. உடனே அவன் மனதில் மிக்க கலவரமுண்டாய்விட்டது. ஆயினும் மதனவல்லியைத் தான் அனுபவியாமல் இன்னொருவன் வசம் விட்டுவிட அவன் மனம் சற்றும் ஒப்பவில்லை. அந்த அதிசயமான மாது எக்கெதியாயினும் அவனுக்கு எள்ளளவும் அக்கரையேயில்லை. ஆனால் இப்போது சுகசிங்கம் பிரபுவுக்கு என்ன சொல்வது என்ற இந்த ஒரு கவலையே யவனை வாதித்தது. இந்த சங்கதியை யடியோடு அப்பிரபுவுக்குத் தெரியாமல் அடியோடு மறைத்துவைக்க முடியாது. தன் அந்தரங்க நடவடிக்கைகளனைத்தும் அறிந்திருக்கும் அத்தகைய சினேகனை விரோதம் செய்து கொள்வதும் தகாது. அதிலும் முக்கியமாய் இளவரசியைப் பெரிய அவமானத்திற்குள்ளாக்க நடந்துகொண்டிருக்கும் விபரீதமான சதியாலோசனையில் அவனே காரியதரிசியைப் போல் இருப்பவன்; அவனுடைய சினேகம் இளவரச

னுக்கு இன்றியமையாததா யிருக்கிறது. என்னசெய்வான்? அவன் மனம் பெருங் குழப்பத்தை யடைந்தது.

கடைசியில் ஒரேயோசனைதான் உத்தமமானதென்று அவன் புத்தியிற்பட்டது. அதாவது உடனே அந்தப்பிரபுவினிடம் சென்று நடந்த உண்மையை யொளிக்காமற் கூறி விட்டு, தான் முன்பு கொடுத்த வாக்குத்தத்தத்திலிருந்தும் தன்னை விடுவித்து மன்னித்து விடும்படி கோரிக்கொள்வதே நலம் என்று தீர்மானித்துக்கொண்டான்.

நேயர்களே! இத்தகைய அறிவிலிகளுக்கெல்லாம் தன்னிடம் சினேகமாயிருப்பவன் எத்தகைய மனிதன்? அவன் உண்மை யன்புடையவனு அல்லது ஏதோ தன் சுயநலத்திற்காக நம்மிடம் சினேகிதன் போல் அபிநயம் செய்கிறவனு? இப்போது நாம் களங்கமின்றி உண்மையைக்கூறி மன்னுப்புக்கேட்க நினைக்கிறேமே இதற்குத் தக்க யோக்கியதையோடும் சினேக வாஞ்சையோடும் அவன் நடந்து கொள்ளக்கூடியவனு? என்று இவற்றை யறிந்துகொள்ளும் புத்திசாலித்தனம் சற்றும் கிடையாது.

ஆகையால் இளவரசன் தான் செய்த தீர்மானப்படி வண்டியை யுடனே நிறுத்தச்செய்து, சாரதியை நோக்கிச் சமீபத்தில் இருக்கும் சுகசிங்கம் பிரபுவின் வீட்டிற்குக் கொண்டுபோகும்படிக் கட்டளையிட்டான். அப்பிரபு அவ்வேளையில் வீட்டிலிருந்தார். அன்று மதனவல்லியின் வீட்டிற்குச்சென்று அவளை வசியம் செய்யவேண்டியது இளவரசன் முறையென்று பிரபுவிற்குத் தெரியும். ஆகையால் இளவரசனைக் கண்டதும், அவன் தனக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தின் படி மதனவல்லியைத் தனக்கு இணங்கும்படி ஏற்பாடு செய்துகொண்டு வந்து விட்டிருக்கிறுன் என்று எண்ணிக்கொண்டான்.

பிரபுவின் காலாள் இளவரசனை யழைத்துக்கொண்டு போய் பிரபுவிருக்கும் அறையில் விட்டுவிட்டுக் கதவை மூடிக்கொண்டு சென்றதே, இளவரசன் சுகசிங்கம்பிரபுவை நோக்கி,

"என் அரிய நண்பரே! நான் வந்துக்கொண்டே யிருக்கையில் என் மனதில் ஒரு யோசனை யுதித்தது. நாம் வேறு விஷயங்களைப்பற்றிப் பேசத்தொடங்குமுன் நான் அதைப் பற்றிக் கூற விரும்புகிறேன்'' என்றான்.

பிரபு:—"தயவுசெய்து கூறுங்கள். நான் கவனமாய்க் கேட்கிறேன்'' என்றான்.

இளவ:—"சிவலிங்கம் பிரபு இறந்துபோய்விட்டார். அவருடைய கௌரவப்பட்டத்திற்கு பாத்தியஸ்தர் யாருமில்லை. ஒருசமயம் அப்பட்டத்தை யேற்றுக்கொள்ளத் தங்களுக்குப் பிரியமிருக்குமென்று கருதினேன்'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட பிரபு சொல்லொணு ஆனந்தமடைந்து தன் ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்து இளவரசனிடம் சென்று அவன் கரத்தைப் பற்றிக்கொண்டு "ஆ! என் அரிய நண்பரே! தங்கள் அன்பிற்காக நான் மிக்க நன்றியுடையவனு யிருக்கிறேன். இப்போது இளவரசியைப்பற்றி நாம் செய்துகொண்டிருக்கும் முயற்சியில் நான் எடுத்துக்கொண்ட சிரத்தையும் கஷ்டமும் தாங்களறியாததல்ல. அம்முயற்சி நிறைவேறியதே எனக்குப் பெரிய பிரபு பட்டமளிப்பதாய் தாங்கள் வாக்களித்திருக்கிறீர்கள். அந்தமுயற்சி நமது கோரிக்கையின்படி பூரணமாய் ஈடேறுமென்று எனக்கு முழுநம்பிக்கையுண்டு, அதனுல் தாங்கள் தங்கள் வாக்குத்தத்தத்தின்படியே நண்பனுகிய எனக்குச் செய்வீர்களென்று நான் நன்கறிவேன்.

இதற்கிடையில் இச்சிறுபட்டம் அளிப்பதைப்பற்றி நான் சொல்லொணு ஆனந்தமடைவதோடு தங்களுக்கு மிக்க நன்றியோடு வந்தன மளிக்கிறேன். மேலும் ஏக காலத்தில் எனக்குப் பெரிய பட்ட மளிக்கப்பட்டால் பார்ப்பவர்களுக்கும் ஒரு அதிசயமாய்த் தோன்றும். அப்படிக்கின்றி முன்னுல் இப்பட்டத்தை யளித்து பிறகு அப்பெரிய பட்டத்தை யளித்தால் அது சாதாரணமாய்த் தோன்றும்'' என்றுன்.

இம்மொழிகளைக் கேட்டதே யிளவாசன் உள்ளத்தில் மிக்க சந்தோஷ மடைந்தான். ஏனெனில் பிரபுவை முன்னுடி சந்தோஷமும் உற்சாகமும் அடையச் செய்துவிட்டுப் பிறகு தன் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்பதே யவன் தந்திரமான யோசனை. ஆகையால் பிரபுவை நோக்கி "என் அன்பார்ந்த நண்பனே! அப்படியே நீ யப்பட்டத்தை யடையும்படி செய்கிறேன். அவசியம் செய்கிறேன். இது முடிவான ஒப்பந்தமே. நாளையதினமே மந்திரிமாரிடம் இதைப்பற்றிப் பேசுகிறேன். நீ பிரபுக்கள் சபையில் எப்போதும் அவர்களது அபிப்பிராயத்தையே ஆமோதித்துப் பேசுகிறவன். அரசகட்சியைச் சார்ந்து உறுதியாய் நிற்பவர்களில் நீ முதன்மை வாய்ந்தவன். ஆதலால் உனக்கு இக்காலியாயிருக்கும் பட்டத்தை யளிக்க அவர்கள் சம்மதியாமற் போகார்கள். ஒருசமயம் அப்படியவர்கள் மறுக்க நினைப்பதாயின் உடனே ஏதாவது ஒரு காரணத்தை யுண்டாக்கி யாவரையும் அடியோடு பதவியிலிருந்து நீக்கிவிட வழிதேடிவிடுவேன். ஆகா கண்டிப்பாய்ச் செய்தே தீருவேன் பார்'' என்றுன்.

பிரபு:—"ஆ! என் அன்பார்ந்த இளவரசரே! மறுபடியுமக்கு மிக்க நன்றியோடு வந்தன மளிக்கிறேன்.

இனி மதனவல்லியைப்பற்றிய சங்கதியென்ன? இன்று தங்கள் முறையல்லவா. அந்த அதிகமான வனப்புடைய கன்னிகையிடம் சென்றிருந்தீர்களோ?" என்றான்.

இளவரசன் "ஆ! அதிருக்கட்டும் நான் இப்பட்டத்தைப்பற்றிய விஷயங்களை யின்னும் பூரணமாய்க் கூறி முடிக்கவில்லை" யென்று மிக்க தந்திரமாய் அவன் கேள்விக்கு நேர்விடை யளிக்காது தட்டிவிட்டு "இப்போது காலியான பட்டத்திற்குப் போட்டியாட்கள் அனேகர் இருக்கிறார்களென்பது உமக்குத் தெரியாததல்ல. ஏனெனில் அது பொறாமை யுண்டாக்கத்தக்க ஒரு கௌரவப்பட்டம். மேலும் நீர் நமக்கு மனமொத்த நண்பர் என்ற விஷயத்தைப் பலரும் அறிந்திருப்பதால் நாம் பாரபட்சமாக அதை யுமக் களிக்கும்படி செய்ததாகவே வதந்தி யுண்டாக்குவது அவர்களுக்குச் சுலபம். ஆகையால் அத்தகைய போட்டிக்காரரோடு நாம் போராடியே தீரவேண்டி யிருக்கிறது. அதில் அவ்வளவு கஷ்டங்கள் எனக்கிருப்பதால், நான் தங்களுக்கு இவ்வளவு நன்மை செய்யும்போது பிரதிபலனாகத் தங்களிடம் ஒரு உபகாரத்தை யெதிர்பார்க்கப் பாத்தியமிருக்கிறதென்றே கருதுகிறேன். உண்மையில் எனக்குச் செய்யக்கூடிய உபகாரம் ஒன்றிருக்கிறது. அதைச் செய்வது தங்களுக்கு மிக்க சுலபமேனும், நான் பெரிய உபகாரமாய்க் கருதக்கூடியது அது" என்றான்.

பிரபு:—"ஆகா. நான் மிக்க சந்தோஷத்தோடு செய்வேன். அதைப்பற்றிச் சற்றும் சிந்திக்கவேண்டாம். தாங்கள் மட்டும் அது இன்ன உபகாரம் என்பதைமட்டும் வெளியிட்டுவிடுங்கள்" என்று மிக்க சந்தோஷத்தோடும் ஆவலோடும் வினவினான்.

இளவ:—"ஆயினும் தாங்கள் அவ்வுதவியைக் கட்டாயம் செய்வதாய் வாக்குத் தத்த மளித்துவிட்டால் பிறகு கூறுவதற்கு என் மனதிற்குச் சந்தோஷமாயிருக்கும்" என்ருன்.

சுகசிங்கம் பிரபு மிக்க குதூகலத்தோடு "ஆகா ஒரு தடையுமின்றித் தாங்கள் கோரும் உதவியைச் சந்தோஷத்தோடு செய்வதாய் நம்பிக்கையோடு சத்தியவாக் களிக்கிறேன். அதைப்பற்றி எள்ளளவும் இனி அய்யப்படவேண்டாம்" என்ருன்.

ஏனெனில் இளவரசன் எப்போதும் பணத்தை வீண் விரையம்செய்பவன். தன்னுல் கூடியவரையில் கடன்வாங்குபவன். தன்னிடத்திலும் அடிக்கடி கடனுகக்கொடு கடனுகக் கொடு என்று பலதரங்களில் பெருந்தொகைகளை வாங்கியிருக்கிருன். ஆகையால் இப்போதும் அவன் பணம் கேட்கவே இவ்வளவு தந்திரம் செய்கிருன் என்று பிரபு உறுதியாயெண்ணிக்கொண்டார். அவருக்கு வரும்படியோ அதிகம். ஆகையால் பணத்தைப்பற்றிக் கவலையில்லை. இதனுல் அவன் கேட்டதற்குத் தாராளமாய் வாக்களித்துவிட்டார்.

இளவரசன் பிரபுவின் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டதே மிக்க சந்தோஷமடைந்து "சரி இதைப்பற்றிப் பிறகு அதிகமாய்ப் பேசிக்கொள்ளலாம். இப்போது தாங்கள் முன்பு கூறிய மதனவல்லியைப்பற்றிச் சம்பாஷிக்கலாமென்று நம்புகிறேன்" என்று மிக்க சாதுர்யமாய்க் கூறினுன்.

———

186540

## 33 - வது அத்தியாயம்

சாகசிங்கம் பிரபுவிற்கு மதனவல்லி விஷயமாய் எள்ளளவும் சந்தேகமில்லை. அவன் அவளைத் தனக்காகவே யேற்பாடு செய்திருப்பான் என்ற பூரண நம்பிக்கையுடையவனாயிருந்தான். ஆதலால் மிக்க சந்தோஷத்தோடு, தன் கரங்களைத் தேய்த்துக்கொண்டே, "ஆகா! பேசலாம்; எவ்வளவு சீக்கிரமாகவேனும் பேசலாம்" என்றார்.

இளவரசன் "நான் நேராய் மதனவல்லியின் மனையிலிருந்தே வருகிறேன். அவளைக்கண்டு சுமார் ஒருமணி நேரம் அவளிடம் சம்பாஷித்துக்கொண் டிருந்தேன். நாம் கேள்விப்பட்டபடி அவள் அதிசய வனப் புடையவளே. அவள் வனப்பை ஒருவரும் அதிகப்படுத்திக் கூறமுடியாது. அது எத்தகையோர் உள்ளத்தையும் கண்ட விநாடியே கவர்ந்து கொள்ளும் சுபாவமுடையது" என்றான்.

இம் மொழிகளைக்கேட்ட பிரபு சற்று மனந்தளர்ந்து "ஓ அப்படியா-அவ்வாறாயின் தாங்களே அவள் வனப்பால் சற்று மயங்கிவிட்டதாகத் தெரிகிறது" என்றான்.

இள:— என் அவள் வனப்பைக் காண்கிற எந்த ஆடவனும் அதன் வலையிலிருந்து தப்பமுடியாதென்று நான் கட்டாயமாய்க் கூறுவேன். ஆனால் நானே எவ்வளவோ தந்திரங்களையும் சாமார்த்தியத்தையும், உபயோகித்து மிக்க சிரமையின்மேல் அவள் என் பிரியத்திற்கு உடன்படும்படிச் செய்தேன். ஆ! மிக்க தந்திரமான கன்னிகை. அவளுக்கும் செல்வம் முதலியவற்றில் பெரிய ஆசையிருக்கிறது.

பிரபு:— ஓ! தாங்கள் அதற்கெல்லாம் சம்மதித்தீர் போலும். ஏதோ பிறகு நடந்தவிஷயங்கள் முழுமையும் கூறுங்கள்.

இள:— மிக்க சம்பாஷணை நடந்தபின் அவள் கடைசியில் என் பிரியத்திற்கு, அதாவது என் அபிமான ஸ்திரீயாயிருக்கச் சம்மதித்துக் கொண்டாள்.

பிரபு துள்ளியெழுந்து, "பேஷ் இது மிக்க நேர்த்தி. அப்புறம் என்ன? மறுபடி இருவரும் சந்திக்க ஏற்பாடு செய்து கொண்டீர்களோ?" என்றார்.

இளவரசன் ஒளிக்காமல், ஆம் நாளை இரவு 9-மணிக்கு நகர உத்தியானவனத்தில் இன்ன விடத்தில் தன் வண்டி ஆயத்தமாயிருக்கு மென்றும் மதனவல்லி முக்காடிட்டுக் கொண்டு வருவாளென்றும் யாவும் உண்மைப்படி கூறினான்.

பிரபு:—"அங்கிருந்து அவளை நேராய் என் மாளிகைக்குக் கொண்டு வந்து விடும்படி தங்கள் சாரதிக்குக் கட்டளையிடுவீர்கள். இதுதானே தங்கள் ஏற்பாடு? இதுதானே தங்கள் நோக்கம்?" என்று ஆவலோடு கேட்டான்.

இளவரசன் "ஆகா அப்படித்தான் உமக்குப் பிரியமானால்" என்று கூறிவிட்டு, அதற்குள் என்னமோ திடீலென்று நினைத்துக்கொண்டவன் போல், "ஹா! இடையில் ஒரு விஷயம் மறந்து விட்டேன். அடுத்தவாரம் தங்களுக்கு அப்புதுப்பட்டம் அளிக்கப்பட வேண்டுமல்லவா? அதற்காக நான் உம்மிடம் கோரும் உதவி யின்னதென்று உமக்கு இன்னம் தெரிவிக்கவில்லையே" என்றான்.

அதற்குள்பிரபு, "ஓ! தங்களுக்கு வேண்டியதைக்கூறுங்கள். ஏனெனில் மதனவல்லியைப்பற்றிப் பேச நான் மிக்க

ஆவலா யிருக்கிறேன். கடைசியில் அவள் நான் அனுபவிக்க வேண்டியவளல்லவா?'' என்றார்.

இள:— அதே மதனவல்லி விஷயமாகத்தான் நான் உம்மிடம் கோரப்போகிற உதவி.

பிரபு இம்மொழிகளைக் கேட்டதே உள்ளத்தில் மிக்க கலவரமடைந்து "தாங்கள் முன் நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு இடையூறுசெய்யக் கருதவில்லை யென்று நம்புகிறேன்'' என்றார்.

இள:— நான் இதுவரையில் நடந்த சங்கதிகள் யாவற்றையும் களங்கமின்றி உம்மிடம் கூறிவிட்டேன். நான் அவளை வரும்படி செய்த ஏற்பாட்டையும் கூறிவிட்டேன். அவள் என் காதலுக்கிணங்கி விட்டதையும் கூறிவிட்டேன். இதுவரையில் என் நிபந்தனைகளின்படி நான் தவருமல் நடந்து கொண்டேன். ஆனால் ஒரு சங்கதி - நான் உண்மைப்படி கூறுகிறேன். நீர் என்ன தந்திர சாமார்த்தியங்களைச் செய்தாலும் அவளை யுமது பிரியத்திற்கு இணங்கும்படி செய்ய முடியாது. ஏனெனில் அவள் சூக்கும புத்திக்கும் தந்திரமான சமயோசித வார்த்தைகளுக்கும் தாம் சற்றும் இணையல்ல. பலவந்தம் செய்தல் என்ற விஷயத்தைப் பற்றியோ நாம் சிந்திப்பதே யோக்கியதையல்ல. தாம் பீமசேனன் போல் பலாட்டிய முடையவரா யிருந்தாலும் அவள் கேவலம் கோழைத்தனமுடைய ஆட்டுக்குட்டியைப்போ லிருப்பினும் அத்தகைய அயோக்கியமான தகாத சிந்தனைக்கு இடங்கொடுக்க மாட்டீர்களென்று நானறிவேன். ஆகையால் தங்களுக்கு அது விஷயத்தில் சற்றேனும் அனுகூலமான வழியில்லாதவரையில், எனது நிபந்தனையிலிருந்து என்னை விடு

வித்து விடும்படி கோருகிறேன். தங்களுக்கு அப்புதுப் பட்டத்தை யளிப்பதற்குப் பிரதிபலனாக நான் கோரும் உதவி யது ஒன்றுதான்" என்றான்.

பிரபு:— அப்படியாயின் முன் தாங்கள் காதலித்த அந்த அதிசய மாதின்மேல் உள்ள பாத்தியதையை யடியோ டழித்துவிடப் போகிறீர்களோ? வென்றார்.

ஆயினும் அவர் அக்கேள்வியை மனத்திருப்தியோடு கேட்டதல்ல. இளவரசனோடு எப்படி நேராய் விரோதம் செய்துகொள்வார்? அதோடு கௌரவப்பட்டத்தின் மேல் ஆசையிருக்கிறது. ஒருசமயம் அதுவும் போய்விட்டால் என்ன செய்வார்?

நேயர்களே! இவர்க ளிருவரும் கொண்டிருக்கும் நட்பு பாஸ்பர அன்பினால் உண்டானதல்ல. அவரவர் சுயானுகூலத்தைக் கருதியே நண்பர் போல் அபிநயம் செய்கிறதேயன்றி வேறில்லை.

ஆகையால் இலவரசனுக்கு மறுத்துக்கூற முடியாமல் இக்கேள்வியைச் சுகசிங்கம் பிரபு கேட்டான்.

இள:— "ஆகா! அதில் எனக்குரிய பாத்தியதையை யடியோடு விட்டு விடுகிறேன். தாங்கள் அவள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விட்டால் மதனவல்லியை யிழப்பதற்கு அது சரியான ஈடாகும். ஏனெனில மதனவல்லிக்குப் பின் அவளே அதிசயமான வனப்புடையவள் என்பது நிச்சயம்" என்றான்.

பிரபு:— "சரி, தாங்கள் நாளை மாலைக்குள், எனக்கு வாக்களித்தபடி அக் காலியாயிருக்கும் பட்டத்தை யெனக்களிப்பதாய்த் தங்கள் முத்திரையிட்ட வாக்குத்தத்தத்தை யனுப்பிவிட்டால் மதனவல்லியைப்பற்றிய நிபந்

தனையிலிருந்து தங்களை விடுவித்து விட எனக்கொரு ஆட்சேபனையுமில்லை'' யென்றான்.

இள:— ஆகா, தடையின்றி யப்படியே செய்கின்றேன்.

பிரபு:—அப்படியாயின் அந்த அரியமாதைப்பற்றித் தாங்கள் இனி கவனிக்க மாட்டீர்களென்பது உண்மைதானே?

இள:— ஆம் சந்தேகமின்றி நீர் உம்மால் கூடிய முயற்சிகளனைத்தும் செய்து அவளைக் கண்டுபிடியும். அதற்காக நீர் எவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டாலும், எவ்வளவு பொருள் செலவு செய்தாலும், அவ்வளவும் தரும். தாம் இதுவரையில் அவ்விஷயத்தில் முயற்சி யெடுத்துக் கொண்டே யிருப்பீர் என்று நான் நம்புகிறேன்.

பிரபு:— அது உண்மையே. நான் அதற்காக ஒரு தகுதியான ஆளை முன்னமே யமர்த்தியிருக்கிறேன். அந்த ஆள் ஒரு விநாடியும் ஆலசியம் செய்யத்தக்க ஆளல்ல. எடுத்த காரியத்தை முடிக்காமல் இடையில் விட்டு விடக் கூடியவனுமல்ல. எத்தகைய இடையூறுகளுக்கும் சற்றும் அஞ்சிப் பின்னிடைகிற ஆளல்ல.

இள:— "எப்படியோ நீ யவளைக் கண்டுபிடித்து உன் பிரியத்திற்கு இணங்கும்படி செய்துகொண்டதே எனக்கு ஒரு பேருபகாரம் செய்யவேண்டும். அதாவது, அத் திங்கட்கிழமை நடந்த அதிசயமான விஷயங்களின் மர்மம் என்ன? அவள் என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்ட பத்திரத்தின் விவரமென்ன? என்ற விவரங்களை யெப்படியாவது அறிந்துகொண்டு வந்து எனக்கு அறிவிக்கவேண்டும்'' என்றான்.

பிரபு:— ஆகா என்னுல் கூடியவரையில் எல்லா விஷயங்களே யும் அறிந்து வந்து தங்களுக்குத் தெரிவிக்கிறேன். இனி கொஞ்சம் சிற்றுண்டி யருந்தலாமே.

இள:— தயவுசெய்து இச்சமயம் மன்னிக்கவேண்டும். நான் சரியாய் மாலே ஐந்து மணிக்கு உள்நாட்டு மந் திரியைச் சந்திக்க வேண்டும். கையொப்பம் வைக்க வேண்டிய பத்திரங்கள் அனேகம் இருக்கின்றன.

பிரபு:— சங்கதி தெரியுமல்லவா? மாகதம்மாளுடைய கடைசிப்பெண் அந்த மீனும்பாள் என்பவள் கடைசி யில் எங்கோ ஓடிவிட்டாளாமே. இது ஒரு அதிருப்தி யான விஷயமல்லவா?

இள:— அதிருப்தியான சம்பவந்தான்; அதற்கு அய்ய மில்லே. ஆயினும் விதியில்லே. என்ன செய்வது? ஆனல் ஒருவிஷயம்; சங்கதியை யாருக்கும் வெளியிட மாட் டேனென்று வாக்களித்திருக்கிருளல்லவா-அதுவரை யில் ஒரு விஷயத்திற்கு நலமே. அந்த வாக்குத்தத் தப்படி யவள் நடந்து கொள்வாளென்று நான் நம்பு கிறேன். அப்படி யவள் யாரிடமாவது கூறினுலும் அவள் பேச்சை யார் நம்புவார்கள்? நம்பினுலும் கூட அதைப்பற்றிப் பிரஸ்தாபம் செய்ய தைரியமுடையவர் கள் யார்? கடுந்தண்டனே கிடைக்குமென்று யாவருமறி வார்கள். ஆகையால் இவ்விஷயத்தைப்பற்றி அஞ்ச வேண்டிய காரணம் சற்றுமில்லே. ஒருவிஷயத்திற்கு அவள் அக்குடும்பத்தினின்றும் நீங்கி விட்டதே நலம். ஏனெனில் அப்படிப்பட்டவள் அங்குச்சென்று விவ காரத்தில் பிரவேசித்திருந்தால் இடையில் எப்படியும் குழப்ப முண்டாகச்செய்து விவகாரத்தையே கெடுத்து விட்டிருப்பாள். எனக்கு மட்டும் ஆரம்பத்திலிருந்தே

இவள் மற்ற மூன்று பெண்களைப் போலல்ல வென்பதே சந்தேகம்.

பிரபு:—மாகதவல்லி உலக அனுபோகமுடைய சாமர்த்தியவதியேயாயினும் சூக்ஷ்ம அறிவுடையவளல்ல. மற்ற என்ன விஷயங்கள் நடந்தாலும் தன் புத்திரிகள் கற்பழியாதிருக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனை மட்டும் ஏற்படுத்திக்கொண் டிருக்கிறாளல்லவா?

இள:—ஆம், ஆம்; இப்போதும் தன் கடைசி புத்திரிபோலவே மற்ற மூன்று புத்திரிகளும் கூட கற்பழியாமலேயிருக்கிறார்களென்று தான் அவள் இப்போதும் நம்பிக்கொண்டிருக்கிறாள். ஆனால் மூத்தவள் கொஞ்சம் கஷ்டத்தின்மேலேயே யெனக் கிணங்கினாள். மற்ற இரண்டு சகோதரிகளும் என் இரண்டு சகோதரர்களுக்கும் சுலபமாய் இணங்கிவிட்டார்கள்.

பிரபு:—தாங்கள் கூறுவது உண்மையே.

இளவ.—மாகதவல்லி தன் ஆயுளில் மணம் புரிந்துகொள்ளவே யில்லையென்று நம்புகிறேன்.

பிரபு:—ஒருபோதுமில்லை. ஆனால் மாகதவல்லியின் சரித்திரத்தையும் அவள் சகோதரிகளின் சரித்திரங்களையும் தாங்கள் கேள்விப்பட்டதில்லையோ?

இளவ:—எப்போதும் நான் பூரணமாய்க் கேட்டதில்லை. பல சமயங்களில் நீர் கூறுவதாய் ஆரம்பித்திருக்கிறீர். ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதாவது ஒரு அசந்தர்ப்பம் நேர்ந்து அதைத் தடைப்படுத்திவிட்டது.

பிரபு:—ஓ அப்படியா? அதைச் சுருக்கமாய்க் கூறுகிறேன். மாகதம்மாள் மூன்று சகோதரிகளோடு பிறந்தவள்.

இவர்கள் நால்வரில் 1-வது உலகநாயகி, 2-வது அன்னம்மாள், 3-வது மங்களம், 4-வது இலட்சுமி.

இவர்களில் இரண்டாவதான அன்னம்மாள் என்றவளே மரகதம்மாள் என்ற மாறுபெயரை வைத்துக்கொண்டு என் சகோதரியின் புத்திரர்களில் ஒருவனுக்கு வைப்பாட்டியாகி இந்த நான்கு புத்திரிகளையும் பெற்றாள். மூத்தவள் கற்புடையவளாகவே யிருந்துவிட்டாள். இவர்கள் பெற்றோர் இவர்கள் பாலியத்திலேயே மடிந்துவிட்டதால் இவர்களுக்குப் போதுமான ஜீவனாதாரமில்லை.

என் சுற்றத்தான் இறந்தபின் நான் மரகதம்மாளுக்கு உதவிசெய்து இப்போது அவர்களிருக்கும் வாசஸ்தலத்தில் நிலைக்கவைத்தேன். அவள் உலக அனுபோக மடைந்தவளாதலால் தன் காதலனிறந்தபின் ஒரு பெரிய மடாதிபதியின் காதலை யேற்றுக்கொண்டாள். அவர் காலத்தில் கொஞ்சம் பொருளைச் சேர்த்துக்கொண்டதோடு அவர் இறந்தபோதும் இவளுக்குக் கொஞ்சம் பொருள் வைத்தார். ஆனால் அவருக்கும் இவளுக்கு முள்ள சம்பந்தம் மிக்க இரகசியமானது. நான்கு சகோதரிகளில் ஒருத்தியாய்ப் பிறந்த இவள் தானும் நான்கு புத்திரிகளை யுடைத்தா யிருத்தல் ஒரு அதிசயமல்லவா?

இளவ:—சரி. மற்ற சகோதரிகள் என்னமானார்கள்?

பிரபு:—மூன்றாவது பெண்ணாகிய மங்களம் என்பவள் மூன்று நான்கு மாதங்கட்குமுன் மிக்க அதிசயமாய்க் காணமற் போய்விட்ட அதே அருமைநாதம் பிரபுவின் காதலுக்குரியவளா யிருந்தாள்.

இளவரசன் இதைக் கேட்டதே திடுக்கிட்டு "அய்யோ அருமைநாதம் பிரபுவின் சங்கதி யது முதல் தெரியவே யில்லையோ? அவன் மிக்க நல்லவனாயிற்றே!" என்றான்.

பிரபு:—நான்கு மாதங்களாய் அவர் சங்கதி யொன்றுமே தெரியவில்லை. அவர் புத்திரனாகிய மதுரைநாயகம் இன்னும் அவரைப்பற்றிய உண்மை தெரியாமல் மிக்க துயரத்தை யனுபவித்துக்கொண் டிருக்கிறான். நமதுநாட்டில் பிரக்யாதிபெற்ற துப்பறியும் உத்தியோகஸ்தனாகிய செல்வநாதன் இன்னும் அதுவிஷயமாய் வேலைசெய்துகொண்டிருக்கிறானாயினும், அவரைப்பற்றிய உளவு ஒன்றும் அகப்படவில்லை. ஆனால் அந்த மங்களம் என்பவள் அருமைநாதம் பிரபுவினிடம் சேர்ந்தபோது அவர் நல்ல வாலிப வயதிலிருந்தார். அவர்களுக்குக் குழந்தைகள் இருந்ததாய்த் தெரிகிறது. ஆனால் விபரம் தெரியவில்லை. மாரகதவல்லி, மிக்க பரிதாபமான நிலைமையி லிறந்துபோன அச்சகோதரியைப்பற்றி விபரமாய்க் கூறப் பிரியப்படுகிறதில்லை. நான்காவது பெண் இலட்சுமி ஒரு வாலிப குருவின் காதலுக் கிலக்காய் விட்டாள். அவள் பெயரை நான் கேள்விப்படவில்லை. ஒருசமயம் கேட்டிருந்தாலும் இப்போது நினைப்பில்லை. ஒன்றுமட்டும் நிச்சயம். அதாவது அவள் அந்த குருவிற்கு ஒரு குழவியை யீன்று அதன் விஷயமாய் மிக்க ஆபத்தில் சிக்கிக்கொண்டு, அதை யவளே கொன்றதாய் நியாயாதிபதி முன் கொண்டுபோகப்பட்டு, அதற்காக விசாரணைகூட நடந்தது. பிறகு முடிவு யெப்படியோ, அவள் என்னகெதி யானாளோ, இப்போது உயிரோடிருக்கிறாளோ யில்லையோ வெனக்குத் தெரியாது. மரகதம்மாளுக்கும் அச்சங்கதி தெரியாது. அவளுக்கும் இலட்சுமிக்கும் அவ்வளவாய் பரஸ்பர அன்பு கிடையாது. மங்களமே அவளுக்கு மிக்க அன்பான சகோதரி.

இளவரசன் மேற்கண்ட சரித்திரமனைத்தும் மிக்க கவனத்தோடு கேட்டு "கற்புடையவளாயிருந்த அந்த மூத்த சகோதரியாகிய உலகநாயகி என்னமானாள்?" என்று வினவினான்.

பிரபு:—எனக்குத் தெரியாது. மாகதம்மாளுக்கே அச்சங்கதி தெரியாதாம். நாளாய் விட்டதால் அவள் இறந்து போயிருப்பாளென்றே நம்பப்படுகிறது. இப்போது அச்சரித்திரம் தங்களுக்குக் கூடியவரையில் பூரணமாய்த் தெரிந்துவிட்டதென்று கருதுகிறேன்.

இள:—இது ஒரு அதிசயமான சரித்திரமே. இனி நான் விடைபெற்றுக்கொண்டு செல்கிறேன். ஆ! நாளைக்கு மதனவல்லியைப் பற்றி முயற்சிசெய்ய வேண்டிய முறை யும்முடையதல்லவா.

பிரபு:—ஆம். ஆனால் இப்போது நமக்குள் நேர்ந்த சம்பாஷணையால் நான் அவ்விஷயத்தில் முயலாது விட்டுவிட வேண்டியதே.

இளவ:—"சரி; நீர் அப்படித்தான் நடந்துகொள்வீரென்று நான் எதிர் பார்த்தேன்" என்றான்.

ஆனால் அச்சமயம் கபடசிந்தனையுடைய அப்பிரபுவின் முகத்தில் உண்டான வஞ்சகக்குறியை யவன் கவனிக்கவில்லை.

சற்று நேரத்திற்குள் இளவரசன் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

---

# 34 - வது அத்தியாயம்.

நேயர்களே இப்போது நாம் கந்தபுரியில் விட்டுவந்த நமது கோமளவல்லியைக் கவனிப்போம். முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடந்த மறுநாள் இரவு சுமார் ஒன்பதுமணி யிருக்கும். கோமளம் அசுகமாய்ப் படுக்கையிலேயே கிடக்கும் தன் அத்தையாருக்கு வேண்டிய யாவும் செய்துவிட்டு அம்மூதாட்டியி னருகில் உட்கார்ந்திருக்கிருள். ஆனல் அவள் மனம் மட்டும் தன் காதலனுகிய ஜெகதீசன் மேலேயே யிருக்கிறது. அவன் அதிக நாளாயினும் ஒரு வாரத்திற்குள் இரத்தினபுரியி லிருந்து திரும்பிவந்து விடுவதாய்க் கூறிச் சென்றிருக்கிருன். ஆனல் அவன் சென்று நான்கு நாட்களே யாயின. ஆகையால்; நாளைக்கு மறுபடி யொரு கடிதமாவது வரும் என்று சிந்தித்துக்கொண்டே யிருக்கிருள். அச்சமயம் வீதியில் ஒரு வண்டி வருகிற சத்தத்தைக் கேட்டதும் நம் காதலன் தானே என்று ஆசைகொண்டாள்.

மறுநிமிடம் அவ்வண்டி தன் வீட்டின் வெளிவாயிற் படிக் கருகிலேயே வந்து நிறுத்தப்படுவதை யறிந்ததே "ஓ! அவர்தான்! அவர்தான்!" என்று மிக்க ஆவலோடு கூறிக் கொண்டே எழுந்து வாயிற்படியை நோக்கி யோடினுள்.

அதற்குள் வேலைக்காரி யாரோ வண்டியில் வருகிருர்களென்றுணர்ந்து துரிதமாய்க் கதவைத் திறக்க வோடினுள். ஆயினும் கோமளம் முன்னுடியேசென்று கதவைத் திறந்துவிட மறுநிமிடம் காதலரிருவரும் மெய்மறந்த ஆனந்தத்தோடு ஆலிங்கனம் செய்துகொண்டார்கள்.

கோமளம் வண்டியினின்றும் முதலிலிறங்கிய தன் காதலனைக் கண்டு அவ்வாறு ஆலிங்கனம் செய்துகொண்டதும் "ஆ! தாங்கள் ஒரு ஆபத்துமின்றி பூரணசுகத்தோடு திரும்பிவந்ததற்காகக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்'' என்றாள்.

ஜெகதீசன் துரிதமாய் ஆலிங்கனத்திலிருந்து பிரிந்து "என் அன்பே! நான் மட்டும் தனியாக வரவில்லை; என்கூட மகா உத்தமியும் அறிவாளியுமான ஒரு கன்னிகையையழைத்துவந்திருக்கிறேன். அச் சகோதரியின் பரிதாபமான சரித்திரத்தை நீ கேட்டமாத்திரத்தில் உன் சுபாவமான பெருந்தன்மையும் உதாரமும் கருணையுமுடைய குணத்தால் அவளைப் பூரண அன்போடு ஆதரிப்பாயென்று நன்றாய் அறிவேன்'' என்றான்.

இத்தகைய சந்தர்ப்பம் புதுக் காதலர்களுக்குள் நேரும்போது பெரும்பாலும் ஸ்திரீகளுக்குப் பொறாமையும் வெறுப்புமே நேரிடுவது சுபாவம். கோமளவல்லிக்கோ அப்படியொன்றும் சம்பவிக்கவேயில்லை. ஏனெனில் உலகத்தில் நடக்கும் கெட்ட நடவடிக்கைகளைப்பற்றி யவள் ஒரு விவரமும் அறியாள். அவளிடம் துரோகம், சூது முதலியன கிடையா. அத்தகைய வழிக ளிருக்கின்றன வென்று அவளுக்குத் தெரியாது. ஆகையால் தன்னைப்போலவே மற்றவர்களையும் எண்ணிக்கொண்டாள். இதனால் தன் காதலன் கோரியபடி அவன் கூடவந்த கன்னிகையைப் பட்சத்தோடு எற்றுக்கொண்டாள். அதிலும் அவள் சரித்திரம் மிக்க பரிதாபமானதென்று குறிப்பாய்த் தன் காதலன் கூறியதைக் கேட்டதால் அவள்மேல் கோமளத்திற்கு இரக்கமும், வாஞ்சையும் உண்டாய்விட்டன.

அவள், வந்த கன்னிகை நோக்கிப் பரிவோடு, "அம்மா நான் உன் சொந்த சகோதரியாகவும் இவ்வீடு உன்சொந்த வீடுபோலும் பாவித்துக்கொள்ளக் கோருகிறேன்" என்றாள்.

அவளுடைய இனிய குரலையும் இரக்கமும் அன்பும் பொருந்திய மொழிகளையும் கேட்ட மீனும்பாள் மனம் கரைந்து விட்டதால் கோமளத்தை யுடனே யாலிங்கனம்செய்து கொண்டு கண்ணீரால், கூறமுடியாத தன் நன்றியை வெளியிட்டாள். கோமளம் உடனே வந்த இருவரையும் கூடத்திற் கழைத்துச்சென்றாள். வேலைக்காரி துரிதமாய்ப் போஜனம் வட்டித்தாள்.

நேயர்களே அச்சமயம் சந்தித்த காதலர் இருவருடைய சந்தோஷத்தையும்பற்றி விவரித்துக் கூறுவதெனின் சாத்தியமல்ல. அவர்கள் சந்தோஷத்தைக்கண்ட மீனும்பாளே சற்றுநேரம் தன் துயரமனைத்தையும் மறந்து சந்தோஷத்தை யனுபவித்தாளென்றால் காதலரடைந்த சந்தோஷம் எத்தகையதென்பதை நீங்களே சிந்தித்துக்கொள்ளலாகும்.

போஜனம் முடிவதற்குள் மீனும்பாளுக்கு ஒரு தனியறை ஆயத்தம் செய்யப்பட்டது. சாப்பாடு முடிந்ததும் அவள் தன் அறைக்குச் சயனத்திற்குச் செல்ல விடைபெற்றுக்கொண்டாள். ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமிருப்பதோடு, காதலர் இருவரும் சம்பாஷிக்க வேண்டிய விஷயங்க ளிருக்கு மாதலால் நாம் அதற்கிடையூறா யிருக்கலாகாதென்பது அவள் கருத்து. ஜகதீசனுக்கும் தான் தன் காதலியோடு தனித்துப் பேசவேண்டும் என்ற ஆவலிருந்தது. ஏனெனில் அவளுடைய சகோதரியாகிய கற்பகவல்லியைப்பற்றிப் பேசவேண்டி யிருப்பதோடு, மீனும்பாள் சரித்திரத்தைப்பற்றியும் தன் காதலி

யிடம் புகலவேண்டி யிருந்தது. கோமளவல்லிக்கோ சுகானந்தன் என்ற குரு தன்விஷயத்தில் நடந்துகொண்ட அக்கிரம நடக்கையை யொளிக்காமல் நடந்தது நடந்தபடி தன் காதலனுக்குக் கூறவேண்டும் என்ற பேரவாவால் நாம் எப்போது நம் காதலனோடு ஏகாந்தமாய் இருப்போமோ வென்று ஆவலுடையவளா யிருந்தாள். இக்காரணத்தால் காதலரிருவரும் மீனும்பாளுக்குச் சந்தோஷமாய் விடையளித்துச் சயனித்துக்கொள்ளும்படி வேலைக்காரியைக் கூட்டி அவளுக்கு ஆயத்தம் செய்யப்பட்டிருந்த அறைக்கு அவளை யனுப்பிவிட்டார்கள்.

186540

## 35 - வது அத்தியாயம்.

ஜெகதீசன் அக்குருவின் நடக்கையைக் கேட்டதே அடக்கொணுக் கோபமடைந்து அவனை யெப்படியும் அவமானப் படுத்தவேண்டுமென்று தன் கருத்தை வெளியிட்டான். கோமளம் தன்னை யந்த ஆபத்தினின்றும் காப்பாற்றிய அம்மாதின் கோரிக்கையை யீடேற்றவேண்டுமென்று கூறியபோது, அவன் தன் காதலியின் நன்றியறிதலான பெருந்தன்மையுடைய குணத்தைக் கண்டு மிக்க சந்தோஷமடைந்தான்.

அச்சங்கதி முடிந்ததே ஜெகதீசன் கற்பகவல்லியின் க்ஷேமத்தைப்பற்றிக் கூறி அவள் தன் தங்கைக்கு அளித்த கடிதத்தையும் சிறு சிப்பத்தையும் கொடுத்தான். அச் சிப்பத்தில் விலை யுயர்ந்த இரத்தின ஆபரணங்களிருந்தன. கற்பகவல்லி அவை பச்சையப்ப பிள்ளையாலும் அவர் மனைவியாலும் அளிக்கப்பட்டனவென்று எழுதி யிருந்தாள். கோமளவல்லி கடிதத்தையும் அப்பரிசுகளையும் கண்டதும் மிக்க சந்தோஷ மடைந்தாள்.

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

## (2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனாயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

## அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | ரத்தினபாய் ... | 1 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2பாகம் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| இராஜாமணி ... | 2 | 0 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தவிக் ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ... | 9 | 10 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.